# ஒருவருக்கு தூக்கு; மற்றவருக்கு 15 வருட சிறை

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 177
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆடி 22 ஜமா. ஆகிர் 4 வெள்ளிக்கிழமை [7-8-70]

ஈழநாடு சந்தா

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 18-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| வருடம் | ரூ. 66-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும்.
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

## வாக்குறுதிப்படி இரு கொத்து அரிசிவழங்க தீவிர முயற்சி

## மாங்குளம் முக்கொலை வழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி மாங்குளம் முக்கொலை வழக்கில் முதல் எதிரியான வில்லியம் என்பவருக்கு மரண தண்டனையும் இரண்டாம் எதிரியான பியரத்தின என்பவருக்கு 15 வருட கடூழியச் சிறைத்தண்டனையும் விதித்து நீதியரசர் திரு. ஏ. எல். எஸ். சிறிமானே நேற்றுத் தீர்ப்பளித்தார் 1968-ம் ஆண்டு ஜுலை மாதம் 2-ம் திகதி செல்லத்துரை, சின்னையா, பால்ராஜ் ஆகியோரைக் கொலை செய்ததாக வில்லியம், பியரத்தின ஆகிய இருவர் மீதும் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு சென்ற ஒரு வார காலமாக வட பகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. ஏ எல் எஸ். சிறிமானே முன்னிலையில் நடைபெற்று வந்தது

இருதரப்பு வழக்கறிஞர்களும் தொகுப்புரை நிகழ்த்தியதைத் தொடர்ந்து நீதியரசர் நேற்றுகாலை தமது தொகுப்புரையை நிகழ்த்தினர். இதன் பின் ஜூரிசபையினர் ஒன்றரை மணிநேரம் ஆலோசனை செய்தபின் ஜூரி சபையின் தலைவர் தங்கள் முடிவைத் தெரிவித்தார்

ஜூரி சபையினர் தெரிவித்த முடிவைக்கொண்டு முதல் எதிரிக்கு மரண தண்டனையும் இரண்டாவது எதிரிக்கு 15 வருடக் கடுங்காவல்தண்டனையும் விதித்து நீதியரசர் தீர்ப்பளித்தார்.

செல்லத்துரையை கொலை செய்த குற்றச்சாட்டில் 1-ம் எதிரியும், 2-ம் எதிரியும் கைமோசக் கொலைக் குற்றவாளிகளென்று ஜூரி சபையினர் ஏகமனதாகத் தெரிவித்தனர்.

சின்னையாவைக் கொலை செய்த குற்றச்சாட்டில் 1-ம் எதிரி கொலைக் குற்றவாளியென்றும், 2-ம் எதிரி கைமோசக் கொலைக் குற்றவாளி என்றும் ஜூரி சபையினர் ஏகமனதாகத் தெரிவித்தனர்.

பால்ராஜாவை கொலை செய்த குற்றச்சாட்டில் 1-ம் 2-ம் எதிரிகள் கைமோசக் கொலைக் குற்றவாளிகள் என ஜூரி சபையினர் ஏகமனதாகத் தெரிவித்தனர்.

நீதியரசர் 1-ம் எதிரிக்கு முதலாவது குற்றச்சாட்டுக்கு 5 வருட கடூழியச் சிறைத்தண்டனையும், மூன்றுவது குற்றச்சாட்டுக்கு 5 வருட கடூழியச் சிறைத் தண்டனையும், இரண்டாவது குற்றச்சாட்டுக்கு மரண தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

நீதியரசர் 2-ம் எதிரிக்கு ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் 5 வருட வீதம் 15 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்

அசைஸ் விசாரணை இம்மாதம் 10-ம் திகதி வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது

### பாக் விமான விபத்தில் 30 பேர் பலி

ராவல்பிண்டி, ஆகஸ்ட். 6 பாகிஸ்தானில் ராவல்பிண்டிக்கருகில் இன்று அதிகாலை விமானமொன்று விழுந்து நொருங்கியதில் அதிலிருந்து அதிகாரிகள் உட்பட 30 பேரும் மரணமானுர்கள். விபத்துக்கான காரணத்தை பாகிஸ்தான் அரசு ஆராய்ந்து வருகின்றது. விமானம் லாகூர் நோக்கிப் பறந்து கொண்டிருக்கையில் விழுந்து நொருங்கியது.

## நல்லூர் திருவிழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவம் இன்று பகல் 10 30 மணி பூசையுடன் ஆரம்பமாகும். பகல் 12 மணிக்கு கொடியேற்ற வைபவம் நடைபெறும். இரவு பூசை 7 மணிக்கு ஆரம்பமாகும். 8 மணிக்கு சுவாமி வீதிவலம் வருவார். திருவிழாவையொட்டி பொலிஸ்பாதுகாப்பு ஏற்பாடுகளை யாழ். பொலிஸ் பகுதியினர் செய்துவருகின்றனர்,

ஆலயத்துக்கு வருபவர் ஆசார சீலர்களாகவும் ஆபாச உடையின்றியும் ஒழுங்குமுறையுடன் வருமாறு வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர் சுந்தரலிங்கம் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## டிசம்பருக்குள் பர்மாவிடமிருந்து ஒன்றரை லட்சம் தருவிக்கப்படும்

கோட்டை, வியாழன் செப்டம்பர் மாதத்தில் பாவனையாளர்களுக்கு இரண்டுகொத்து அரிசியைவாக்குறுதியளித்தபடி விநியோகிப்பதற்கு அரசாங்கம்தீவிர முயற்சி எடுத்துவருகின்றது இதற்காக வெளிநாடுகளிலிருந்து போதிய அளவுஅரிசியைத் தருவித்து கையிருப்பில் வைத்துக்கொள்ளவும் அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. இந்த வகையில் மிக விரைவில் பர்மாவிலிருந்து ஒருலட்சத்து 40 ஆயிரம் தொன் அரிசி இலங்கைவந்து சேரவிருக்கின்றது.

ஆகஸ்ட்மாதத்துக்கும் டிசம்பர் மாதத்துக் நமிடையில் 1லட்சத்து 40 ஆயிரம்தொன் அரிசியை பர்மா இலங்கைக்கு வழங்கவிருக்கிறது செப்டம்பர் மாதம் மக்களுக்கு இரண்டு கொத்தாக வழங்கவருக்கும் பங்கீட்டரிசியில் இது ஒரு பகுதியாகும்.

மேற்படி அரிசியைப்பெறுவதற்கான ஒப்பந்தத்தை கடந்த மாதம் 30ந் திகதி இலங்கைக்கு வந்துள்ள 3 [illegible]ப்பினர்களைக் கொண்ட பர்மிய தூதுகோஷ்டியுடன் நேற்று இலங்கை ஒப்பந்தம் செய்துகொண்டது. இப் பர்மிய தூதுகோஷ்டியும் இலங்கை அரசும் கடந்த சில தினங்களாக மேற்படி அரிசி விடயமாக கலந்தாலோசித்து நேற்று ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டுள்ளன. இலகுவான வழியில் பணத்தை பெறுவதற்கு பர்மா இணக்கம் தெரிவித்துள்ளது.

மேலும் சீன அரசாங்கத்திடமிருந்தும் அரிசியைப் பெறுவதற்கு வெளிநாட்டு உள்நாட்டுவர்த்தக அமைச்சு சீன தூதுகோஷ்டியுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறது.

### சுந்தரருக்குப் பாதுகாப்பு!

யாழ்ப்பாணம், வெள்ளி மாவை ஆலயத் திருவிழாக் கால நிர்வாகி திரு. வி. சுந்தரலிங்கம் நேற்றுக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த போது அவருக்கும்பொலிஸ்காரர் ஒருவர் பாதுகாப்பாக வந்தார் திரு, சுந்தரலிங்கத்தின் வீட்டுக்கும் பொலிஸ் பாதுகாப்பளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது,

இதுபற்றி யாழ்ப்பாணம் பொலிசாரிடம் விசாரித்தபோது சொல்வதற்குஒன்றுமில்லை என்று கூறினர்,

சைவ அனுட்டான பாதுகாப்புச்சபைத்தலைவர்

மகாவலி அபிவிருத்தித் திட்டம்:

## அமெரிக்க ஆலோசனை ரத்து செய்ய முடிவு

கோட்டை, வியா மகாவலி அபிவிருத்தித் திட்டத்துக்கு அமெரிக்காவிடமிருந்து பெறப்பட விருந்த ஆலோசனைகளை ரத்துச் செய்வதென அரசாங்கம் இன்றுமுடிவு செய்துள்ளது

அமெரிக்கா சம்பந்தமாக ஸ்ரீமாவோ அரசாங்கம் ஏற்கனவே எடுத்த நடவடிக்கைகளில் இதுவுமொன்று என கருதப்படுகிறது. அமெரிக்க சமாதானப் படையை இலங்கையிலிருந்து வெளியேறும்படி முதன்முதலாக உத்தரவிட ஐக்கிய முன்னனி அரசு அமெரிக்காவிடமிருந்து பெறப்பட்ட நிதியுதவியையும் கடந்த மாதம் நிறுத்தியிருந்தது தெரிந்ததே,

பிறநாட்டு நிபுணர்களின் ஆலோசனைகளை மகாவலி திசை திருப்பும் திட்டம் சம்பந்தமாகப் பெறுவதிலும் பார்க்க, உள்ளூர் நிபுணர்களை நியமித்து குறைந்த செலவில் ஆலோசனைகளைப் பெற முடியும் என அரசாங்கம் கருதுவதாக மகாவலிதிட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதை நிறுத்துவதன் மூலம் 1கோடி ரூபாக்கு மேல் மிச்சப்படுத்த முடியுமென அரசாங்கம் எதிர் பார்க்கிறது.

இன்றைய அரசாங்கத்தை

## தொழிலாளர் சாதகமாக பாவித்துக் கொள்ள வேண்டும்

யாழ்ப்பாணம், வெள்ளி கூட்டுத்தாபனம் நிறுவப்

## காலி மாநகரசபைத் தீர்மானம்

## இரத்தினக்கல் கூட்டுஸ்தாபனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுலட்சத்து 40 ஆயிரம் தொன் அரிசி இலங்கைவந்து சேரவிருக்கின்றது.

பர்மிய தூதுகோஷ்டியுடன் நேற்று இலங்கை ஒப்பந்தம்

சின தூதுகோஷ்டியுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறது.

தெரிகிறது.

இதுபற்றி யாழ்ப்பாணம் பொலிசாரிடம் விசாரித்தபோது சொல்வதற்கு ஒன்றுமில்லை என்று கூறினர்.

சைவ அனுட்டான பாதுகாப்புச்சபைத்தலைவர் திரு. ரி. சிவலிங்கமும் தனக்குப்பொலிஸ்பாதுகாப்புத்தேவை என பொலிசாரைக் கேட்டுள்ளார்.

லாக உத்தரவிட்ட ஐக்கிய முன்னனி அரசு அமெரிக்காவிடமிருந்து பெறப்பட்ட

மேல் மிச்சப்படுத்த முடியுமென அரசாங்கம் எதிர் பார்க்கிறது.

# தொழிலாளர் சாதகமாக பாவித்துக் கொள்ளவேண்டும்

யாழ்ப்பாணம், வெள்ளி

தொழிலாளர் பேரில் அனுதாபமுடையதாக தற்பொழுது பதவிக்கு வந்திருக்கும் மக்கள் ஆட்சியின் கீழ் தொழிலாளர் குறைகளை எடுத்துரைத்து நிவாரணம் பெறக்கூடியதான நிலையை தொழிலாளர் சாதகமாகப் பாவித்துக் கொள்ளவேண்டும்,

அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்க வருடாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் நல்லூரில் நடைபெற்றபோது சங்கத் தலைவர் திரு ஏ. துரைராஜசிங்கம் கூறினர் திரு ஏ. துரைராஜசிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது: சங்கத்தின் தலைமைப்பீடம் எடுக்கும் நடவடிக்கைகள் வெற்றிபெற தொழிலாளர்மேலான ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சுருட்டுத் தொழிலாளரின் நன்மைக்காக அவர்கள்படும் கஷ்டத்தை தெரிவிக்க, சரியான கூலிபெற தொழிலாளர் வேலை வாய்ப்புப்பெற சுருட்டுத் தொழில் கூட்டுத்தாபனம் நிறுவப்படவேண்டும்.

செயலாளர் திரு ஏ.விஸ்வநாதன் பேசும்போது யாழ்ப்பாணச் சுருட்டை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முயற்சிக்க வேண்டும் என்றும் இதன்மூலம் அந்நிய செலாவணியை சேமிக்கலாமென்றும் கூறினர்:

சுருட்டுத் தொழில் கூட்டுத்தாபனம் ஒன்றை உருவாக்க வேண்டுமென அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

புதுவருட உத்தியோகத்தர்களாக கீழ்க்காணுவோர் தெரிவு செய்யப்பட்டனர் தலைவர் திரு ஏ. துரைராஜசிங்கம், இணைச் செயலாளர்கள் திருவாளர்கள் ஏ விஸ்வநாதன் ஏ. என் நாதன், உப தலைவர்கள் திரு கே. பொன்னுத்துரை, திரு எஸ் கந்தையா, உப செயலாளர் திரு எஸ். செல்வராசா, தனதிகாரி திரு கே. விஸ்வலிங்கம்.

காலி மாநகரசபை தீர்மானம்

# "தஹநாயக்கா எம். பி. பதவியை உடனே கைவிட வேண்டும்

## எந்தக்கட்சியும் அவரை சேர்க்கவும் கூடாது"

(நமது காலி நிருபர்)

காலித் தொகுதியின் ஆட்சிமன்றப் பிரதிநிதி பதவியை உடனடியாகக் கைவிடும்படி டாக்டர் டபிள்யூ. தஹநாயக்காவை காலி மாநகர சபை வற்புறுத்தியுள்ளது.

காலித் தொகுதி ஆட்சிமன்றப் பிரதிநிதி பதவியைக் கைவிடும்படி டாக்டர் தஹநாயக்காவை வற்புறுத்தும் தீர்மானம் பெரும்பான்மை வாக்குகளால் சபையில் நிறைவேறியது.

மாநகரசபைக் கூட்டத்திற்கு மேயர் திரு. டபிள்யூ ரி விஜயகுலசூரிய தலைமைவகித்தார் சமசமாஜக்கட்சி உறுப்பினர் ஜனுப் மன்சூர் மரிக்கார் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

அவர் பேசுகையில் "டாக்டர் தஹநாயக்கா. கடந்த பொதுத் தேர்தலில் காலித் தொகுதியில் போட்டியிட்டு மக்களைத் தவருனவழியில் நடத்தியுள்ளார். இன்று அவர் கட்சி அரசியலுக்கு எதிராகப் பிரசாரம் செய்கிறார்" என்றார். லங்கா சமசமாஜக்கட்சி அவரை ஏற்றுக்கொள்ளாது. சிறிலங்கா சுதந்திரக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சிகளும் அவரை ஏற்றுக்கொள்ள மாட்டா என நம்புகிறேன் என்றார் ஜனுப் மரிக்கார்.

இத்தீர்மானத்திற்கு உதவி மேயர் திரு. டி பி. விஜயநாராயண கொண்டு வந்த திருத்தத்தில், தஹநாயக்காவைத் தம் கட்சிகளில் சேர்த்துக்கொள்ள வேண்டாமென்று, திருமதி பண்டாரநாயக்கா, டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் எஸ் ஏ விக்கிரமசிங்கா ஆகியவர்களைக் கேட்டுக்கொள்வதென்று தெரிவிக்கப்பட்டது தீர்மானத்தை ஆதரித்து ஏழு பேரும் எதிர்த்து 4 பேரும் வாக்களித்தனர். ஒருவர் வாக்களிக்கவில்லை. மூவர் சபைக்கு வரவில்லை

# இரத்தினக்கல் கூட்டுஸ்தாபனம் நிறுவ முயற்சி

கோட்டை, வியாழன்

இரத்தினக்கல் கூட்டுத்தாபனம் ஒன்றை நிறுவுவது குறித்து நிதியமைச்சர் டாக்டர் என் எம் பெரேரா தற்சமயம் ஆராய்ந்து வருகிறார்,

தினம் 20 லட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக்கற்கள் நாட்டிலிருந்து கடத்தப்படுகிறதாம். இவ்வாறு இரத்தினக்கல் கடத்தப்படுவதை தடுக்க இக்கூட்டுத்தாபனம் பெரிதும் உதவியாகவிருக்கும் மற்றும் இரத்தினக்கல் இறக்குமதி, செப்பனிடுதல் முதலியவற்றையும் இக்கூட்டுத்தாபனம் கவனிக்கும்

மேலும் இரத்தினக்கல் தொழிலில் சிறந்த பயிற்சியை அளிப்பதற்கு பிரத்தியேக நிறுவனம் ஒன்றை நிறுவுவது பற்றியும் நிதியமைச்சர் ஆராய்கிறார்

## இடமாற்றம் ரத்து

நெல்லியடி, வியாழன்

கட்டைவேலி மிஷன் பாடசாலை ஆசிரியையான திருமதி முருகேசுவின் மாற்றம் நிறுத்தப்பட்டுள்ளது. குருநாகல் பாடசாலை ஒன்றுக்கு இவருக்கு இடமாற்றம் கிடைத்திருந்தது.

# தொண்டமானாற்றிலும் இராணுவத்தாக்குதல்

## ஜெயக்குமார் - சூரியமூர்த்தி

வல்வெட்டித்துறை, வியா

தொண்டமானாற்றில் இராணுவ சிப்பாய்கள் சிலர் இன்று பொதுமக்கள் சிலரைத் தாக்கியதாகவும் தாக்கப்பட்டவர்களில் சென்ற பொதுத் தேர்தலில் பருத்தித்துறைத் தொகுதியில் தி. மு. கழக அபேட்சகராகப் போட்டியிட்ட திரு. பூ. விசாகரத்தினம் ஒருவரென்றும் திரு. கணபதிப்பிள்ளை என்பவர் தாக்குதலுக்குள்ளான மற்றொருவரென்றும் பொலிசில் புகார் செய்யப்பட்டிருக்கிறது.

பொலிசில் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து இச்சம்பவம் பற்றி விசாரணை செய்வதற்காக இராணுவ முகாமுக்குச் சென்ற பொலிஸ் சார்ஜன்ட் கூட அங்கிருந்து விரட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மீன் பிடிக்கச் சென்று திரும்பியபொழுதே கரையில் வைத்து கடற்றொழிலாளர் தாக்கப்பட்டதாக வல்வெட்டித்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டிருக்கிறது.

இச்சம்பவம் பற்றி உடனடியாக வல்வெட்டித்துறை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி பொலிசாருடன் தொண்டமானாறு இராணுவ முகாமுக்குச் சென்று விசாரணை நடத்தியதாகவும் ஓர் இராணுவ சிப்பாய் அடையாளம் காட்டப்பட்டு உடனடியாக வேறு முகாமுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

இந்த இராணுவத் தாக்குதல் சம்பவம் பற்றி பிரதமருக்கும் பொலிஸ் அதிபருக்கும் தந்தி மூலம் அறிவிக்கப்பட்டது.

# பெண்களுக்கு மாத்திரம் தனி பஸ் சேவை

## இன்று பரீட்சார்த்தமாக கொழும்பில் ஆரம்பம்

கோட்டை, வியாழன்

பெண்களுக்கென தனியான பஸ் சேவையை இலங்கைப் போக்குவரத்து சபை நாளை (வெள்ளி) மாலை கொழும்பில் ஆரம்பிக்கிறது.

மாலை 4-45 மணிக்கு 3 பஸ் வண்டிகளை பெண்களுக்கு மாத்திரம் பரீட்சார்த்தமுறையில் இ போ ச சேவையில் ஈடுபடுத்தவிருக்கின்றது. இச்சேவை கொழும்பு கோட்டையில் இருந்து ஆரம்பமாகும்.

ஜனநெருக்கடியான இடங்களில் அலுவலகங்களுக்குச் செல்லும் பெண் ஊழியர்கள் நீண்டநேரம் பஸ் தப்புரிகளில் நீண்ட வரிசைகளில் நின்று கஷ்டப்படுகிறார்கள். இவர்கள் தங்கள் காரியாலயங்களுக்கு குறிப்பிட்டநேரத்துக்கு செல்ல முடிவதில்லை. மாலையில் இருப்பிடம் திரும்புவதிலும் இதே கஷ்டத்தை அனுபவிக்கவேண்டியிருக்கிறது. இவர்களது இந்தக் கஷ்டத்தைப் போக்கவே இ போ. ச. மேற்படி நடவடிக்கையை எடுக்கிறது

இச் சேவை கொழும்பில் திருப்திகரமாக அமைந்தால் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பெண்களுக்கெனப் புறம்பான சேவையை நடாத்த இ போ ச தீர்மானித்துள்ளது. ——

## பிரதமர் சாம்பியா செல்வார்

கோட்டை, வியாழன்

சாம்பியாவில் உள்ள லுசாகாவில் செப்டம்பர் மாதம் நடைபெற விருக்கும் மண்டலச் சார்பற்ற நாடுகளின் உச்சி மகாநாட்டில் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா கலந்து கொள்வார். இவர் இலங்கையிலிருந்து செல்லும் தூதுகோஷ்டிக்குத் தலைமை தாங்கிச் செல்வார்.

மண்டலச் சார்பற்ற நாடுகளின் தலைவர்கள் யாவரும் இம் மகாநாட்டில் கலந்து கொள்வர்.

# "புதிய அரசமைப்பில் தமிழரின் உரிமைகள் கிடைக்கும்"

## திருமலை எம். பி. நம்பிக்கை

திருக்கோணமலை, வியா.

"தமிழர்களுடைய எந்த உரிமைகள் பறிக்கப்படுமென்று தெரிகின்றதோ அந்த நிமிடமே எமது பதவிகளை உதறித்தள்ளிவிட்டு நமது அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கு நாம் முன்வருவோம்"

திருமலை சக்திநிலையம் அளித்த வரவேற்புவைபவத்தின்போது திருமலை எம்பி திரு பா. நேமிநாதன் மேற்கண்டவாறு கூறினர்

அவர் மேலும் கூறியதாவது:

எங்களுடைய அடிப்படை உரிமைகள் எந்தவிதமான காரணம் கொண்டும் பறிக்கப்படமாட்டாது என நான் பூரணமாக நம்புகின்றேன். இலங்கை குடியரசாக பிரகடனப்படுத்துகின்ற வேளையில் தமிழர்களுடைய அடிப்படை உரிமைகளும் சலுகைகளும் உறுதிப்படுத்தப்பட்டு நாமும் இந்நாட்டின் ஒரு தேசிய இனமாகக் கணிக்கப்படுவோம் என்பதை தமிழர்களுக்கு நான் கூறுக்கொள்ள விரும்புகின்றேன்.

மக்கள் அரசாங்கம் இனமத ரீதியற்ற ஒரு சோஷலிசஜனநாயக ஆட்சியை நிறுவுவதற்கு பாடுபடும் இந்தவேளை இலங்கையில் வாழுகின்ற சிறுபான்மையினத்துக்கும் மக்களரசாங்கத்தின் முன்மாதிரியான போக்குக்களினுல் விமோசனம் இருக்கும் அப்படி இருக்காது என்றபட்சத்தில் நாம் எமது பதவிகளைத் துறந்து எமது உரிமைகளைப் பெறத் தயங்கமாட்டோம்

## லைட்டைத்திருட முயன்ருராம்

நல்லூர், வியா

நல்லூர் கிராமசபை எல்லையிலுள்ள ஆடியபாதம் வீதியில் ஒரு மேக்குறிலைட்டைத் திருடும் நோக்கத்துடன் லைட் கம்பத்தில் ஏறியதாகச் சந்தேகிக்கப்படும் ஒருவரை இப்பகுதி மக்கள் பிடித்து லைட் கம்பத்தோடு கட்டி வைத்தனராம். இவர் கந்தர்மடத்தைச் சேர்ந்தவரென்றும், மாநகரசபையின் ஊழியர் எனவும் தெரியவருகிறது. கோப்பாய் பொலிசாரால் கைது செய்யப்பட்ட இவர் காவலில்வைக்கப்பட்டுள்ளார்.

# எம். பி. க்கள் பதவிக்கு இடையூறு விளைவிக்கும் சட்டம் அறவே நீங்கவேண்டும்

## செனட் விவாதத்தில் நடேசன் உரை

கொழும்பு, வியாழன்

இப்போதைய சட்டத்தில் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் பதவிக்கு இடையூறு விளைவித்துக்கொண்டிருக்கும் 13வது பிரிவை முற்றுகவே நீக்கிவிடவேண்டும், உலகில் தென்னுபிரிக்காவைத் தவிர வேறெந்த நாடுகளிலும் இப்படியான சட்டம் இருக்கவே முடியாது, இந்தியாவில் இது போன்ற சட்டம் இருந்திருக்குமானல் ஜவர்கல்லால் நேரு போன்றபெரியார்களை நாம் கண்டிருக்க முடியாது, எனவேஇது போன்ற பிரிவை முற்றுக அகற்றிவிடவேண்டும் என்பதே எனது கருத்தாகும்,

இவ்வாறு செனட்டர் நடேசன் இன்று செனட் சபையில் பேசுகையில் கூறினர். இலங்கை அரசியல் சட்ட திருத்த மசோதாவை நீதியமைச்சர் திரு. ஜெயமானே இன்று செனட்டில் சமர்ப்பித்தார்.

இதுவரை காலமும் நீதிமன்றங்களில் தண்டனை பெற்ற ஒருவர் ஆட்சிமன்ற உறுப்பினராக இருக்க முடியாதிருந்தது. இப்போதைய திருத்தச் சட்டத்தில்குற்றத்தின் தன்மையைப் பொறுத்து எம். பியாகயிருக்கலாம் என்று மசோதாவில் கூறப்பட்டுள்ளது.

செனட்டர் நடேசன் மேலும் பேசியதாவது.—

1947ம் ஆண்டில் ரத்மலானையில் நடைபெற்றபஸ்ஊழியர் வேலைநிறுத்தத்தை ஊக்குவித்ததாக திரு பிலிப் குணவர்த்தனுவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டவழக்கொன்றில் திரு பிலிப் குணவர்த்தனுவுக்கு 3 மாத கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதால் அவர் அப்போதிருந்த எம் பி, பதவியையும் இழக்க வேண்டி ஏற்பட்டது. அப்போது நியமன எம்பியாக இருந்த திரு கிறெஸ்டர் அரசியல்வாதிகளுக்கு, இவ்வித சிறைத் தண்டனையினுல் பதவியிழப்பு நேரிடக் கூடாது என்று ஆட்சி மன்றத்தில் கூறினர், சட்டத்தைமாற்றியமைக்கவேண்டு மென்றும் திரு கிறெஸ்டர் வற்புறுத்தினர். ஆனல் அப்போது பிரதமராகஇருந்த திரு டி. எஸ் சேனநாயகா இதற்கு சம்மதிக்கவில்லை இவ்வாருக

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

சுன்னுகம் கருவாட்டுக் கடையடியில் ரசீதுகள், ஒப்பந்தப்பத்திரங்கள், பிரதானமான கடிதங்கள் அடங்கிய புற்பை ஒன்று 4-8-70-ந் திகதி 10 மணியளவில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். ரூபா 50/- சன்மானம் வழங்கப்படும். 3040

### விற்பனைக்கு

வட-இலங்கைத் தமிழ் நூற்பதிப்பகத்தாரின் புதிய பதிப்பு வெளிவந்துவிட்டது. க. பொ. த. (சாதாரண) தேர்வுக்குரிய தமிழ்மொழிப் பாடப் பயிற்சிகள் இவை: 0 கல்வித் திணைக்களத்தின் புதிய பாடத் திட்டத்துக்கமைய எழுதப்பட்டவை. 0 பரீட்சைப் பகுதியின் மாதிரி வினுப் பத்திரத்தைப் பூரணமாகத் தழுவி எழுதப்பட்டவை. 0 புதுமுறை வினுக்கள் 80 கொண்ட பகுதி I, கட்டுரை, சுருக்கம், செய்யுள் விளக்கம், கடித வகை வினுக்கள் கொண்ட பகுதி II என்னும் இரண்டும் அடங்கியவை. 0 இரண்டாம் பகுதி வினுக்களுக்கான குறிப்புக்கள் கொண்டவை. 0 இரண்டாம் பகுதி வினுக்களுக்கும் இந்நூலிலேயே விடை அளிக்கக் கூடிய வசதி உண்டு. விலை ரூபா 3-00. தபாற்செலவு வேறு. எல்லாப் புத்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம். 3039

### விற்பனைக்கு

உடுவில் சங்குவேலி, கந்தரோடை ரேட்டுக்கு அருகாமையில் உள்ள 6 பரப்புக் கொண்ட குடியிருப்புச் சதுரகாணி உளது. வாங்க விரும்புவோர் கீழ்க் கண்ட விலாசத்துக்கு வந்து காணவும். என். குமாரசுந்தரம், 46/4, 1-ம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 3038

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 7—8—70

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9-00)

344 மீ அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 பண்ணுறிந்தமிழ், 8-00 குரான், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 பாட்டு.

இரவு 6-00 கிராமியகீதங்கள், 6-30 விவசாயநிகழ்ச்சி, 7-00 வாத்தியஇசை, 7-15 நாடகம், 7-45 மெல்லிசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 சித்திரம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — சௌகார்ஜானகி நாகேஷ்—ஜெயந்தி நடித்த
இரு கோடுகள்

2வது வாரம் வெஸ்லி மானிப்பாய்
தினசரி 3 காட்சிகள் 2-30, 6-30, 10-00 மணி
சத்தியன், ஷீலா, மது நடித்த
செம்மீன்
(ஈஸ்ட்மன் கலர் - மலையாளம்)

வின்ஸர் 2-வது வாரம்
(யாழ்ப்பாணம்) ✱ ராஜம் ✱ புவனேந்திரம்
தினசரி 4 காட்சிகள் நடித்த
வெண்சங்கு


## கேள்வி விளம்பரம்

### பட்டணசபை, பண்டத்தரிப்பு

பின்வரும் ரேட்டு வேலைகளுக்கு சில் வைத்த கேள்விகள் 24 8-70 முற்பகல் 10 மணி வரை என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும். கட்டுப்பணமாக ரூபா 50-00ம் கேள்விப்பத்திரக் கிரயமாக ஒவ்வொன்றுக்கும் ரூபா 5-00ம் செலுத்தியதின் பேரில் 21-8-70 பிற்பகல் 3 மணி வரை இக்கந்தோரில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு கேள்விப்பத்திரம் வழங்கப்படும். அனுபவம் வாய்ந்த ஒப்பந்தகாரர் ரூபா 25-00 செலுத்தி இச்சபையில் பதிந்து கொள்ளலாம்.

மேலதிக விபரங்கள் பட்டணசபைக் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

1. செபமாலை மாதா வீதி.
2. அம்மன் வீதி.
3. கடைத்தெரு வீதி பக்கக் கான் கட்டுதல்.

ரே. சூசைப்பிள்ளை,
தலைவர்,
பட்டணசபை,
பண்டத்தரிப்பு.

பட்டண சபை
காரியாலயம்.
பண்டத்தரிப்பு,
4-8-70. 2395

## கனிஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சை

### கார்த்திகை 1970

வடமாகாண ஆசிரியர் சங்கத்தினுல் நடாத்தப்படும் இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பாடசாலை மாணவர்களிடமிருந்து 16-9-70க்கு முன்பாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளிடமிருந்து 31-8-70க்கு முன்பாகவும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப்பத்திரங்களை கீழ்க்காணும் விலாசத்திற்கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

1970—1971 பரீட்சைக் குழு உத்தியோகத்தர்கள் பின்வருமாறு:-

தலைவர்: திரு. M. பேராயிரவர் (4-ம் கட்டையடி, பலாலி ரேட், உடும்பிராய்)

காரியதரிசி: திரு M. திருநீலகண்டசிவம் (வட்டுக் கிழக்கு, வட்டுக்கோட்டை).

உபகாரியதரிசி: திரு A. கலியாணசுந்தரேசன் (தேவிமனை, உடுவில் மேற்கு,

## 3 மைல் நீச்சல் போட்டி

நெடுந்தீவு வியா

இம்மாதம் 8-ந் திகதி நெடுந்தீவில் 3 மைல் நீச்சல் போட்டியொன்று நடைபெறவிருக்கிறது. இலங்கை விளையாட்டு இலாகாவின் ஆதரவுடன் நடாத்தப்படும் இப்போட்டியின் ஒழுங்குகளை நெடுந்தீவு விளையாட்டுத்துறை அதிகாரி திரு. நா. அ. முருகேசு கவனித்துவருகிறுர்.

......

## விளையாட்டுக் கழக கூட்டம்

யாழ்ப்பாணம், வியா

இணுவில் ஸ்ரீகணேசா சனசமூக நிலைய விளையாட்டுக் கழக பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்றது.

திரு. க. கதிரவேல் தலைமைவகித்தார் திரு. ரி.எஸ். முருகையா உரையாற்றினுர் புதிய உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: சி பரமலிங்கம், காரியதரிசி: அ ஜெயபாலரத்தினம், தனுதிகாரி: த. தருமலிங்கம்.

— —

## புதிய குரவருக்கு வரவேற்பு

உடுப்பிட்டி, வியா.

ரோமாபுரியில் பாப்பரசரிடம் குருப்பட்டம்பெற்ற கரவெட்டியை சேர்ந்தபுதிய குரவர் வண. வரப்பிரகாசம் யோசேப் செல்வராசா சுவாமிகளுக்குத் தும்பளை தேவமாதா ஆலயத்தில் வரவேற்பளிக்கப்பட்டது. புதிய குரவர் தேவமாதா ஆலயத்தில் திவ்வியபூசை ஒப்புக் கொடுத்தார்.

உதவி மேற்றிராணியார் அதிவண. அன்ரன்லீயோ இராசேந்திரா புதிய குரவரை வாழ்த்தினுர். லூர்து மாதா கோவில் வளவில் உதவி மேற்றிராணியாருக்கும், புதிய குரவருக்கும் கத்தோலிக்கமக்களால்வரவேற்பளிக்கப்பட்டது. வண சுவாம்பிள்ளை சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற இவ்வரவேற்பு விழாவில் ஓய்வுபெற்ற நீதிபதி திரு அரசுவால்டன், பலாலி கனிஷ்ட பல்கலைக்கழக அதிபர் திரு. கந்தசாமி, பேராசிரியர் திரு பி. மரியாம்பிள்ளை ஆகியோர் பேசினர்.

— —

## ஆஸ்பத்திரியில் மருந்து இல்லை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'தமிழ்ப்பகுதிகளில் முதலிட இவர்களை தூண்டவேண்டும்'

யாழ்ப்பாணம், வெள்ளி

"கொழும்பில் உள்ள பிரபல முதலாளிமார்களின் முதலீட்டில், ஒரு சிறு பகுதியாவது தமிழ்ப் 'பிரதேசங்களில் செலவிடப்படவேண்டும். இதனுல் தமிழ்ப் பிரதேசங்கள் பொருளாதார வளம் பெறுவதோடு, வேலையில்லாதிண்டாட்டமும் ஓரளவு நீங்கும்" எனத் தெல்லிப்பழையிலுள்ள தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே வி செல்வநாயகம் இல்லத்தில் நடந்த காங்கேசன்துறைத் தொகுதி அபிவிருத்தி பற்றிய கூட்டத்தில் வழக்கறிஞர் குமரகுரு கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் அங்குள்ள முதலாளிகளை இவ்விஷயமாகக் கண்டு பேசி, இவ்வுண்மையை அவர்கள் உணரவும் தமிழ்ப் பிரதேசங்களில் முதலீடு செய்யவும் ஒரு குழுவை நியமிக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். காங்கேசன்துறைத் தொகுதியின் பல பகுதியிலிருந்தும் பிரமுகர்கள் பலர் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## 'தீப்பெட்டி உற்பத்தி குடிசை கைத்தொழிலாக வேண்டும்'

—உதவியமைச்சர்

கோட்டை, வியாழன்

'தீப்பெட்டி உற்பத்தி குடிசைக்கைத் தொழிலாக்கப்படவேண்டும் உத்தரவு பெற்ற தொழிற்சாலைகள் தீப்பெட்டி உற்பத்திசெய்யும் தற்போதைய முறை நீக்கப்படவேண்டும்.

நேற்றுமுன்தினம் ஆட்சிமன்றம் உபசபாநாயகர் ஜனுப் ஐ. ஏ. காதர் தலைமையில் கூடியபொழுது தீப்பெட்டி உற்பத்தியாளர்களுக்கு வரிகுறைப்புப் பற்றிய விடயம் சம்பந்தமாக விவாதிக்கப்பட்ட போது உதவி தொழிலமைச்சர் திரு. ஹேமச்சந்திரா சிறிசேன உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினுர்:

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் எமது அயல் நாடாகிய இந்தியாவில்கூட தீப்பெட்டி உற்பத்தி குடிசைக் கைத்தொழிலாகவே நடைபெறுகிறது. இலங்கையின் பழைய கைத்தொழில்களில் ஒன்ருன தீப்பெட்டி உற்பத்தி இவ்வளவு காலமாகியும் நாட்டின் தேவையைப் பூர்த்திசெய்யத்தக்க அளவு முன்னேறவில்லை தீப்பெட்டி உற்பத்தியில் தற்போது கையாளப்படும் கோட்டாமுறை முற்ருக நீக்கப்படவேண்டும்' எனக் குறிப்பிட்டார்

நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா தீப்பெட்டி உற்பத்தியாளருக்கு வரி குறைத்தது பற்றிக் குறிப்பிடுகையில் 'தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் பலதடவை என்னைச்சந்தித்து தங்கள் குறைபாடுகளைத் தெரிவித்ததைத் தொடர்ந்து 15 வீதத்திலிருந்து 3 வீதமாக வரி குறைக்கப்பட்டுள்ளது கைத்

## இலவசமாகக் கூட போதிக்கக் கூடாது

பருத்தித்துறை. வியா.

தனியார் கல்விநிலையங்களில் அரசாங்க பாடசாலைகளிற் கடமையாற்றும் ஆசிரியர் எவ்வித பாடங்களும் இலவசமாகத்தானும் போதிக்கக்கூடாதென ஒரு சுற்றறிக்கை கல்விப்பகுதியால் வெளியிடப்படவிருப்பதாகத் தெரிகிறது பல ஆசிரியர்கள், முக்கியமாக விஞ்ஞான ஆசிரியர் பாடசாலைகளில் போதிக்கவேண்டியளவு திறமையை அங்கு வெளிக்காட்டாது தனியார் கல்வி நிலையங்களில் காட்டுவதால் கல்வி ஒரு வர்த்தகப்பொருளாகப் போவதாகவும் இதனுல் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர் பெரிதும் பாதிக்கப்படுவதாயும் அரசாங்கத்தின் சமசந்தர்ப்பக்கொள்கைக்கு இவ்வித ஆசிரியரின் செய்கை முட்டுக்கட்டையாய் இருப்பதாகவும் கல்விப்பகுதிப் பிரதான உத்தியோகத்தர் ஒருவர் கூறினுர்.

---

## இலங்கைத் தேயிலை வீழ்ச்சியா?

கோட்டை, வியாழன்

இங்கிலாந்தின் தேயிலைச் சந்தையில் இலங்கையின் மதிப்புக் குறைந்து விடுமா என்ற கேள்வி இப்பொழுது உள்ளூர் தேயிலைவர்த்தகர்களிடம் எழும்பியுள்ளது:

லண்டனிலுள்ள யூதர்களுடைய தேயிலை ஸ்தாபனங்கள்



வின்ஸர் 2-வது வாரம்
(யாழ்ப்பாணம்) * ராஜம் * புவனேந்திரம்
தினசரி 4 காட்சிகள் நடித்த

# வெண்சங்கு

ராஜா என். எஸ். கிருஷ்ணன்
(யாழ்ப்பாணம்) ரி. ஏ. மதுரம் - டெய்ஸி ராணி
தினசரி 3 காட்சிகள் நடித்த

# 67-ல் என்.எஸ்.கிருஷ்ணன்

(எஸ், ரி. ஆர். பிலிம்ஸ்)

அமரர் அண்ணு, தமிழக முதலமைச்சர் மு. கருணநிதி, திருமுருக கிருபானந்தவாரியார் ஆகியோரின் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

பிலிம் (f) பெயர் பத்திரிகை டெல்லியில் நடாத்திய நட்சத்திரக் கலைவிழாவும் கலரில் காண்பிக்கப்படும்.

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை

வெலிங்டன் யாழ்ப்பாணம் திரைகளில்
தினசரி பகல் 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்
மற்றும்பலர் நடித்த
'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும் தெய்வத் தமிழ்க் காவியம்'

# துணைவன்

கதை வசனம் பாலமுருகன் சங்கீதம் K.V. மகாதேவன்
தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்


பிராய்)

காரியதரிசி: திரு M. திருநீலகண்டசிவம் (வட்டுக்கிழக்கு, வட்டுக்கோட்டை). உபகாரியதரிசி: திரு A. கலியாணசுந்தரேசன் (தேவிமனை, உடுவில் மேற்கு, சுன்னுகம்).

பரீட்சை சம்பந்தமான கடிதங்கள் யாவும் கீழ்க் காணும் விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

கௌரவ காரியதரிசி,
மு. திருநீலகண்டசிவம்.
2396

## மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி ஒன்று அளவெட்டி பிளக்கைத்தரைவையில் நடைபெறும் இப்போட்டியை அளவெட்டி விவசாயக் கழகத்தினர் ஒழுங்கு செய்துள்ளனர்.

அளவெட்டி கிராமமுன்னேற்றச்சங்கத் தலைவர் பண்டிதர் க. நாகலிங்கம் தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு சுன்னுகம் பொலிஸ் நிலைய அதிபர் திரு. நவரத்தினராசா பங்கு பற்றி பரிசில்கள் வழங்குவார். திரு. வ. பொன்னம்பலம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.


ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30 மணி
போயா, பிரிபோயா 2-30
THE VALLEY OF GWANGI

MANOHARA JAFFNA
Daily 4-30, 7-00 & 9-45 p.m.
Poya days 10-30 A.M.
Shakespear's
ROMEO and JULIET
(Is no ordinary Love Story)
Starring- 15 years old OLIVIA HUSSEY (Girl)
17 years old LEONARD-WHITING (Boy)

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 945-P.M.
Walter Matthau & Anne Jackson
in
THE SECRET LIFE OF AN AMERICAN WIFE
(Adults only)


## ஆஸ்பத்திரியில் மருந்து இல்லை?

எழுதுமட்டுவாள், வியா

[illegible]கவில் கிராமச்சபையின்கீழ் இயங்கிவரும் எழுதுமட்டுவாள் ஆயுள்வேத வைத்தியசாலையில் மருந்துகள் இல்லையென நோயாளர் தெரிவிக்கின்றனர். கடந்த 3 மாதங்களுக்குமேல் வைத்தியரும், கிளாக்காக கடமை புரியும் பெண்மணியும் வீணுக காலை 8 மணிதொடக்கம் மாலை 4 மணிவரையும் இருந்துவிட்டு போகின்றனராம்.

## ஆலய உற்சவம்

உரும்பராய், வெள்ளி

உரும்பராய் கற்பகவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும். சங்கீத உபந்நியாசங்களும் தினந்தோறும் இடம்பெறும்.

## திருக்கேதீஸ்வரத்தில் சுந்தரர் குருபூசை

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவர்கள் திருக்கேதீஸ்வரத்தில் சுந்தரமூர்த்தி நயனுர். குருபூசையை விமரிசையாகக் கொண்டாடவிருக்கின்றனர். பிரத்தியோக மோட்டார் வண்டியில் நூற்றுக்கு மேலான மாணவமாணவிகளும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் இதனையொட்டி திருக்கேதீஸ்வரம் செல்லவிருக்கின்றனர். கூட்டுப் பிரார்த்தனை, இன்னிசை சொற்பொழிவு ஆகிய நிகழ்ச்சிகள் கோவிலில் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

## சுழிபுரத்தில்

சுழிபுரம் அறுபத்துமூவர் குருபூசை மடத்தில் இம்மாதம் 9-ம் திகதி சுந்தரர் குருபூசை கொண்டாடப்படவிருக்கிறது. புராணபடனம் மகேஸ்வர பூசை, விசேஷ பூசை ஆகியன இடம்பெறும்

பலதடவை எண்ணைசந்தித்து தங்கள் குறைபாடுகளைத் தெரிவித்ததைத் தொடர்ந்து 15 வீதத்திலிருந்து 3 வீதமாக வரி குறைக்கப்பட்டுள்ளது கைத்தொழில் அமைச்சர் [illegible]ருக்கு நல்ல தரமான தீப்பெட்டிகளை நியாயமான விலையில் உற்பத்திசெய்து கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்கிறுர் எனக்கூறினுர்.

கெபத்மலை ஆட்சிமன்ற அங்கத்தவர் பேசுகையில் கூறியதாவது. இந்த வரி குறைப்பினுல் மக்களுக்கு நன்மையில்லை உற்பத்தியாளர்களே நன்மையடைகிருர்கள். தீப்பெட்டிகளும் தரக் குறைவானவைகளாகவேயுள்ளன அரசாங்கம் தீப்பெட்டி உற்பத்தித்தொழிலை குடிசைக் கைத்தொழிலாக்க வேண்டும். இவ்வாறு செய்தால் கிராமப்புறங்களில் உள்ள பலருக்கும் வேலை வாய்ப்பேற்படும். அதே வேளையில் நாட்டின் தேவையையும் பூர்த்திசெய்யலாம்.

தற்போது 'லேபல்' தொடக்கம் தீப்பெட்டி உற்பத்திக்குவேண்டிய சகல மூலப் பொருட்களும்இறக்குமதி செய்யப்படுகின்றன இந்த நிலைமாறி இம்மூலப் பொருள்களையெல்லாம் உள்நாட்டிலேயே பெறக் கூடியதாகச் செய்யவேண்டும் வியாபாரிகளுக்கு தீப்பெட்டி விநியோகிப்பதில் நடைபெறும் சீர்கேட்டையும் அரசாங்கம் கவனித்து நீக்க வேண்டும்.

## வாலிபர் வாஞெலிமன்றம்

உடுப்பிட்டி, வியாழன்

நெல்லியடியில் வாலிபர் வாஞெலிமன்றம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது. நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு க பாலேந்திரம், காரியதரிசி: திரு கே கதிர்காமத்தம்பி, தனதிகாரி: திரு ரீ கனகரத்தினம் ஆறுபேரடங்கிய நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

மதிப்புக் குறைந்து விடுமா என்ற கேள்வி இப்பொழுது உள்ளூர் தேயிலைவர்த்தகர்களிடம் எழும்பியுள்ளது.

லண்டனிலுள்ள யூதர்களுடைய தேயிலை ஸ்தாபனங்கள் இலங்கைத்தேயிலையைப் பகிஸ்கரித்து வருகின்றன. கிழக்காபிரிக்கதேயிலை வர்த்தகர்களால் இலங்கை-இந்திய தேயிலைக்கு க்கடும் போட்டி இருந்து வருகிறது லண்டனுக்கு கிழக்கு ஆபிரிக்க தேயிலை ஏற்றுமதி விரைவாகப் பெருகிவருகிறது. அதனுல் லண்டனிலுள்ள தொழிற்சாலைகள் யூதர்களினுல் கட்டுப்படுத்தப்படலாமென அஞ்சப்படுகிறது.

அடுத்த மாதம் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே நடைபெறவிருக்கும் வர்த்தகப் பேச்சுவார்த்தையில் இவ்விடயத்திற்கு முதலிடம் கொடுக்கப்படுமெனத் தெரியவருகிறது.

## அபராதம்

திருக்கோணமலை, வியா.

திருகோணமலையைச் சேர்ந்த இஸ்மாயில் என்பவர் சட்டத்துக்கு விரோதமாக தமது வீட்டில் 5ருத்தல் கஞ்சாவை வைத்திருந்தகுற்றததுக்காக திருமலை நீதிபதி 1000ரூபா அபராதம் விதித்தார்.

... ...

மட்டுவில், வியா

மட்டுவில் கந்தர்மகாவித்தியாலயத்தின் பெற்ருர் தினவிழா இவ்வாண்டு கொண்டாடுவதில்லையெனவும் விழாவுக்காகச்செலவிடவிருக்கும் பணத்தை பாடசாலையைச் சீர்திருத்தியமைப்பதற்குச் செலவிடுவதென பெற்ருர் ஆசிரியர் தீர்மானித்துள்ளனர்.

அண்மையில் மட்டுவில் கந்தர் மகாவித்தியாலய அதிபர் திரு. பொ. சபாரத்தினம் தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது. பாடசாலையின் பெயர் மாற்றுவது குறித்து ஆராயப்பட்டது.


யாழ்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!

கடந்த 25 வருடங்களுக்குமேல் உங்களுடன் நெடுங்கிய தொடர்பு கொண்டு, உங்கள் நகைகள் வைரத் தேவைகளை நம்பிக்கையாக செய்து. உங்களின் அன்பையும், அபிமானத்தையும் பெற்றவர்கள், புதியதோர் ஸ்தாபனத்தை நிறுவி உங்களுக்கு தொடர்ந்து சேவை செய்ய முன்வந்திருக்கிருர்கள்.

ஆரம்ப நன்னுளை எதிர்பாருங்கள்!

எஸ். எல். எம். தீபி அன் சன்ஸ்

நகைகள் — வைர வியாபாரிகள்.

கன்னுதிட்டி, (R. G. பில்டிங்) யாழ்ப்பாணம்.





'அல்கதீன்'

உபயோகிப்பதற்கு மிக இலகுவான குழாய், நீளம் வாய்ந்தது - எளிதாய் வளைந்துகொடுப்பது

கமத்தொழிலுக்கும், உணவு உற்பத்திக்கும், இன்று ஏற்பட்டுள்ள பெரும் பிரச்சினை, இலகுவானதும், திறம்பட்டதும், செலவு குறைந்ததுமான நீர்ப்பாய்ச்சு முறை எது என்பதுதான்.

அல்கதீன் அப் பிரச்சினைகளையெல்லாம் தீர்க்கிறது.

நெடு நீளம் வாய்ந்தது, எளிதில் வளைந்து கொடுப்பது, எடை குறைந்தது, பிரித்தமைக்கக்கூடிய மூட்டுகள் கொண்டது, செலவு குறைவானது, அரிக்கப்பட்டு அழிந்தொழியாதது, நொருங்காதது, உராய்வுச் சேதம் இல்லாதது.

இவற்றுடன் இன்னும் எத்தனையோ குணநலங்கள்!

கமத்தொழில், கட்டிட அமைப்புகள், வீடமைப்பு, ஆகியவற்றில் நீர் வசதி பற்றிய பிரச்சினை எது எழுந்தாலும்-அல்கதீன் அவற்றை விரைவாக நீக்கி வைக்கும்.

'அல்கதீன்'

பிற குழாய் வகைகள் யாவற்றிலும் சிறந்து விளங்குவது!

CIC கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிடெட்., தபாற் பெட்டி நிர்: 352, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்காஸியாவில் இரண்டொரு தினங்களில் போர் ஓய்வு ஏற்படும்?

## ஜாரிங் அமைதி முயற்சிகளுக்கு வல்லரசு பிரதிநிதிகள் வரவேற்பு

நியுயோர்க், ஆக. 6

மேற்காஸியாவில் அமைதி யேற்படுவதற்கு முதல் கட்டமாக மூன்றுமாதகாலம் சண்டைநிறுத்தம் ஏற்பட வேண்டும் என்றுஅமெரிக்கா தெரிவித்துள்ள யோசனையின்படி இன்னும் இரண்டொரு தினங்களில் மேற்காஸியாவில் போர் ஓய்வு ஏற்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கான முயற்சிகளில் ஐ நா. மேற்காஸிய அமைதித்தூதுவர் குணர் ஜாரிங் இப்பொழுது இறங்கிவிட்டார். டாக்டர் குணர் ஜாரிங் ஏற்கனவே அரபு நாடுகளின் ஐ. நா. பிரதிநிதிகளையும், வல்லரசுப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசியிருக்கிருர்.

மேற்காஸியாவில் டாக்டர் குணர் ஜாரிங்கின் தலைமையில் அமைதிமுயற்சிகளை ஆரம்பிப்பதற்கு இப்பொழுது சரியான சந்தர்ப்பம் வாய்த்திருக்கின்றது என்பதையிட்டுவல்லரசுநாடுகளின் பிரதிநிதிகளுக்கிடையில் அபிப்பிராய ஒற்றுமை ஏற்பட்டிருக்கின்றது. அமெரிக்கயோசனைகளை அரபுநாடுகள் பலவும் இஸ்ரேலும் ஏற்றுக்கொண்டிருப்பதை வல்லரசுப்பிரதிநிதிகள் வரவேற்றிருக்கிருர்கள், நேற்று ஐ நா. வில் கூடிய ஐ. நா. பிரதிநிதிகள் மேற்காஸிய அமைதிக்கு தெரிவித்துள்ள யோசனைகள் பற்றி ஆராய்ந்தனர். இன்னும் இரண்டுவாரங்களில் மீண்டும் சந்தித்துப் பேசுவதென்று அவர்கள் முடிவுசெய்தனர்.

லிபியா தலைநகரான திரிபோலியில் நேற்று ஆரம்பமான அரபுநாடுகளின்வெளிநாட்டு பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாட்டில் அமெரிக்க யோசனைகள் பற்றி ஆராயப்பட்டது இஸ்ரேலுக்கெதிரான கிழக்கு மேற்கு அரண்களின்நிலைமை குறித்து இந்த மாநாட்டில் இரகசியமாக ஆராயப்பட்டதாகத் தெரிகின்றது. மகாநாட்டில் லிபியா எகிப்திய அதிபர் நாஸர்மீது முழுநம்பிக்கை தெரிவித்ததாகத் தெரிகின்றது. மகாநாட்டில் இடம்பெற்ற விஷயங்கள் பற்றி வேறு தகவல்கள் வெளிவரவில்லை.

### கொமாண்டோ மோதல்

ஐக்கிய அரபுக்குடியரசு அமெரிக்க அமைதி யோசனைகளை ஏற்றுக்கொண்டதை ஆதரிக்கும் அரபு கொரில்லா கோஷ்டியொன்றுக்கும், இதனை எதிர்க்கும் கொரில்லாகோஷ்டியொன்றுக்குமிடையில் நேற்று ஜோர்டான் தலைநகரான அம்மானில் மோதல் ஏற்பட்டதில் பலர் காயமடைந்ததாகவும் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் அறியப்படுகின்றது.

---

## மறவன்புலோ நெசவு நிலையத்தில் திருட்டு

எழுதுமட்டுவாள், வியா

மறவன்புலோ நெசவு நிலையத்தில் கைத்தறிகளில் இடப்பட்டிருந்த நூல்கள், சாறிகள், சாரங்கள் என்பன களவாடப்பட்டுள்ளதாக நெசவுநிலையத்தில் பணியாற்றும் ஆசிரியையும் ஏனைய பெண்களும் சாவகச்சேரிப் பொலிசில் முறைப்பாடுசெய்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இத் திருட்டு நடைபெற்றிருக்கிறதென்றும், யன்னல் கதவுகள் உடைபட்டும் கம்பிகள் பிரிக்கப்பட்டுமிருக்கின்றனவென்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்றுள்ளனவென்றும் நெசவாலைக்கும் அதற்கருகிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கும் பொலிஸ்காவல் ஏற்பாடு செய்துதரவேண்டுமென்றும் நாவற்குழி கிராமசபைத் தலைவரும் மறவன்புலோ மேற்கு சனசமூகநிலையத்தவர்களும் வடபகுதி பொலிஸ்அதிபரைக் கேட்டுள்ளனர்.

## திருட்டை ஒழிக்க தொண்டர்சபை

மட்டுவில், வியா

மட்டுவில் விளைவேலிப் பகுதியிலுள்ள தோட்டங்களுக்குள் திருடர்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளது இரவிலும் பட்டப்பகலிலும் தோட்டங்களில் உள்ளகாய்கறிகளையும், பழவகைகளையும் திருடுவதாக தோட்டக்காரர்களினுல்புகார்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் திருட்டு நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டிருப்பதால், இதை அடியோடு ஒழிப்பதற்காக இப்பகுதி விவசாயிகள் சேர்ந்து ஒரு திட்டம் வகுத்துள்ளனர், தொண்டர் படையொன்று விவசாயிகள் மத்தியில் திரட்டி, இந்தத்தோட்டங்களை இரவுபகல் தொடர்ந்து காவல் புரிவதென்றும் அப்படிச் செய்வதின் மூலமே திருடர்களின் அக்கிரமத்தை நிறுத்த முடியும்என்றும் அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

## "மக்களே தெரிய வேண்டும்"

ஊரதீவு, வியா

"மக்கள் கமிட்டியின் உறுப்பினர்கள் ஆட்சிமன்ற உறுப்பினரின் சிபார்சின் பேரில் தெரிவுசெய்யப்படுவது தவருனதாகும் அவர்கள் அனைவரும் மக்களால் தெரிவு செய்யப்படவேண்டும். அனைவரையும் மக்களால் தெரிவுசெய்வது சாத்தியப்படாவிடின் மக்கள் கமிட்டியின் தலைவர், செயலாளர் ஆகியோராவது மக்களால் தெரிவுசெய்யப்படவேண்டும். அப்போதுதான் மக்கள் கமிட்டிகள் அரசியல் தலையீடின்றி இயங்கும்" எனக் கோரும் மகஜரொன்றை ஊரதீவு இளந்தமிழர் மன்றம் உள்நாட்டமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவுக்கு அனுப்பிவைத்துள்ளது.

## தலைமையாசிரியர்கள் இல்லை

பச்சிலைப்பள்ளி, வியா

பச்சிலைப்பள்ளி வடக்கு, வடமராட்சி கிழக்குப்பகுதியைச் சேர்ந்த கட்டைக்காடு றோ க த க, பாடசாலை, வெற்றிலைக்கேணி றோ க த க பாடசாலை, நாகர்கோவில் றோ க த க பாடசாலை, தாழையடி றோ க த க பாடசாலை செம்பியன்பற்று றோ. க த க பாடசாலை. மணற்காடு றோ க த க பாடசாலை, மாமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் நிரந்தர தலைமையாசிரியர்கள் இல்லை. சில பாடசாலைகளில் உதவி ஆசிரியர்கள், பெண் ஆசிரியைகள் இல்லை.

இதுபற்றி உடன் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளும் தீர்மானம் கிழக்கரை அபிவிருத்தி முன்னணியினுல் கல்விப் பகுதி அதிகாரிக்கும் கிளிநொச்சி, பருத்தித்துறை ஆட்சிமன்ற உறுப்பினருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

## தொழிலாளர் கமிட்டிக் கூட்டம்

நல்லூர், வியா

"அகில இலங்கையிலும் உள்ள இ. போ. ச. டிப்போக்களில் எமது டிப்போ மேலும்முன்னேறிக்கொண்டு வருகிறது. இதற்குத் தொழிலாளர்களின் அயராத ஒத்துழைப்பும். நேர்மையான சேவையுமே காரண ."

கோண்டாவில் டிப்போவில் நடை பெற்ற தொழிலா

## சங்கீத மாணவிகளுக்கு பரிசில்கள்

எழுதுமட்டுவாள், வியா

## 'சட்டம் தன் வேலையை சரிவரச் செய்யும்'

### நிலப்பறி இயக்கத்துக்கு கருணாநிதி எச்சரிக்கை

சென்னை, ஆகஸ்ட் 6

நிலப் பறி இயக்கத்தைக் கைவிடும்படி வலது

வேடிக்கை பார்த்துக்கொண் டிருக்காது. சட்டம் இருக் து. அது தன் வேலை

## இலங்கையர் இருவருக்கு பட்டம்

லண்டன். ஆகஸ்ட் 6

வடமேற்கு இங்கிலாந்திலுள்ள இல்போர்ட் சர்வகலாசாலையில் அண்மையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் இரு இலங்கையருக்குத் தொழில்நுட்ப துறையில் டிப்ளோமா பட்டங்கள்வழங்கப்பட்டன நீர்கொழும்பைச் சேர்ந்த திரு. ஐ. ரி. பெர்ணண்டோ கந்தானையைச் சேர்ந்த திரு வி. எச். பிரேமச்சந்திரா ஆகியோரே இவர்களாவர்.

திரு. பெர்ணண்டோ உயர்தர பொறியியல் தொழில் நுட்பத்திலும். திரு. பிரேமச்சந்திரா உற்பத்தித் தொழில் நுட்பத்திலும் டிப்ளோமா பட்டங்களைப் பெற்றனர். மேற்படி சர்வகலாசாலையில் மொத்தம் 186 வெளிநாட்டு மாணவர்கள் பயின்று வருகிறுர்கள் இவர்களில் 106 பேர் சாம்ராஜ்ய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## லண்டன் வகுப்புகளில் இலங்கைமாணவர்

லண்டன், ஆகஸ்ட்6

இம்மாதம் இறுதியில் லண்டனில் ஆரம்பமாகவிருக்கும் ஆங்கில போதனை பயிற்சி வகுப்புகளில் இலங்கை மாணவர்களும் கலந்து கொள்கிறார்கள். இலங்கை உட்பட 21 நாடுகளைச் சேர்ந்த மொத்தம் 150 மாணவர்கள் இந்தப் பயிற்சி வகுப்புகளில் பங்கு கொள்வார்கள்.

ஆங்கில மொழி ங்கும்

---

# தமிழாராய்ச்சிக் கழகக் கட்டிடம் மதுரையில் அமையவேண்டுமாம்

சென்னை, ஆகஸ்ட் 6

அனைத்துலக தமிழாராய்ச்சிக் கழகத்தை மதுரையில் நிறுவும்படி மதுரை முனிசிபல் சபை கோரிக்கை விடுத்திருக்கின்றது.

இந்தக் கழகத்துக்கான கட்டடத்தை சென்னையில் நிறுவுவதென்று தமிழ்நாடு அரசு ஏற்கனவே முடிவு செய்திருக்கின்றது. இந்தக் கழகத்தின் கட்டடம் மதுரையில் அமைவதே சாலப் பொருத்தமுடையதாகவிருக்கும் என்று பலர் அபிப்பிராயப்படுகிருர்கள் சங்க இலக்கியப் பாரம்பரியத்துடன் மதுரையே நெருங்கிய தொடர்புடையதாக இருந்துவந்துள்ளது. இத்தொடர்புகள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழமையானவையாகும். மதுரையில் தமிழ் ஆராய்ச்சிக்கழகம் உருவாகுவதாயின் இரண்டினதும் பழம் பெருமை மீண்டும் நிலைநாட்டப்படுவதாகவிருக்கும். மேலும் மதுரை தமிழ் நாட்டின் மத்தியில் அமைந்துள்ளது, ஆனுல் சென்னை பட்டினத்தில் ஒரு கரையிலுள்ளது. தமிழ் நாட்டின் தலைநகர் திருச்சிக்கு மாற்றப்படவேண்டும் என்று சிலர் கூறுகிருர்கள். ஆனுல் இது பொருத்தமானதல்ல. ஆனுல் தமிழாராய்ச்சிக்கழகம் மதுரையில் அமையக்கூடாதென்பதற்கு முக்கியமான காரணமெதுவும் கூறுவதற்கில்லை.

தமிழாராய்ச்சிக்கழகக் கட்டடம் சம்பந்தமாகஇப்பொழுது பூர்வாங்க, வேலைகள் மாத்திரமே முடிவுற்றுள்ளன, எனவே கழகக்கட்டடத்தை மதுரையில் அமைப்பதற்கான நடவடிக்கை எடுப்பது பற்றி தமிழ்நாடு அரசு ஆலோசிப்பதற்கு இன்னமும் காலம் கடந்துவிடவில்லையென்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

## துறவியாக விரும்பும் வெள்ளைப் பெண்மணி

கொஹன்ஸ்பேர்க், ஆகஸ்ட் 6

உயர் குடும்பத்தில் பிறந்த தென்னுபிரிக்க 'வெள்ளை'ப் பெண்மணியொருவர் தனக்குள்ள எல்லாவற்றையும் துறந்துவிட்டு இந்தியா சென்று துறவியாகவாழ விரும்புகிருர்.

முப்பத்தொரு வயதான திருமதி கிளாரே ஜூடியத்பேஸ் இல் வாழ்க்கையில் நாட்டமில்லாமல் சதாயோகத்திலேயே ஆழ்ந்திருக்கிருராம் சைவஉணவையே இவர் உட்கொள்ளுகிருராம்.

## ஆறு சடலங்கள் ஒதுங்கின

ராமேஸ்வரம், ஆக. 6

தூத்துக்குடியிலிருந்து கொழும்புக்கு வெங்காயம் ஏற்றிக்கொண்டு வரும் போது விபத்துக்குள்ளானசரக்குக்கப்பலில் வந்த 16பேரில்

## தீப்பெட்டி விளையாட்டு 2 பிள்ளைகள் மரணம்

கிருஷ்ணகிரி, ஆக. 6

தீப்பெட்டியை வைத்து விளையாடியபோது குடிசையில் தீப்பிடித்ததனுல் இரட்டைக்குழந்தைகள் தீயில் வெந்து மாண்ட பரிதாப சம்பவம் கிருஷ்ணகிரி தாலுகா வெள்ளைப்பாளையூர் கிராமத்தில் நடந்துள்ளது. நாலு வயதான ராமன், லட்சுமணன் என்ற இரு குழந்தைகளும் தீப்பெட்டியை வைத்து விளையாடியபோது குடிசையில் இருந்த வைக்கோலில் தீபிடித்ததாகவும் இதன் விளைவாக குடிசையும் தீப்பற்றியதால் குழந்தைகள் தீயினுல் தாக்குண்டு மரணமானதாகவும் விசாரணையில் தெரியவந்தது.

## யாழ் நகரில் பண்டாரநாயகா நினைவுதினம்

யாழ்ப்பாணம், வெள்ளி

முன்னுள் பிரதமர் திரு. பண்டாரநாயகாவின் ஞாபகார்த்ததினம் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் அடுத்தமாதம் 26-ம் திகதி கொண்டாடப்படவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை யாழ் பண்டாரநாயகா ஞாபகார்த்தக்குழு செய்துவருகிறது.

இவ் வைபவத்தில் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் உட்

## உற்சவம் ஆரம்பம்

வேலணை, வெள்ளி

வேலணை கிழக்கு பெருங்குளம் முத்துமாரியம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் இன்றுகொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது. இதைத் தொடர்ந்து மேற்படி ஆலயத்திற்கு முன்னுல் அமைந்துள்ள நால்வர் மடத்தில் இன்றிலிருந்து 9 தினங்களிலும் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுகளும், ஸ்ரீ நடேசப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நடைபெறவுள்ளன.

நால்வர் மட சாமியார் திரு, செல்லப்பா தலைமையில் சிறப்புச்சொற்பொழிவுகளும், ஸ்ரீ நடேசப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நடைபெறவுள்ளன.

நால்வர் மட சாமியார் திரு. செல்லப்பா தலைமையில் சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெறும். முதல்நாள் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டிசொற்பொழிவாற்றுவார்.

## மடுமாதா உற்சவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மருதமடு செபமாலை மாதா ஆவணி உற்சவம் நேற்று ஆரம்பமாகியது இவ் உற்சவம் இம்மாதம் 15-ம் திகதி திருச்சொரூப சுற்றுப் பிரகாரத்துடன் முடிவடையும்.

### சின்னமடு விழா

சரவணை சின்னமடு செபமாலை மாதா தேவாலய வருடாந்த உற்சவம் நேற்று முன்தினம் திருச்சொரூப ஊர்வலத்துடன்முடிவடைந்தது

யாழ் மேற்றிராசன துணை ஆயர் வண எல். ஆர். அன்ரனி அடிகள் திருநாட்சபையை நிறைவேற்றினுர்

## நெடுந்தீவு 10-ம் வட்டார உறுப்பினர்

நெடுந்தீவு, வியா

நெடுந்தீவு கிராம சபையின் 10-ம் வட்டார அங்கத்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போக்களில் எமது டிப்போ மேலும்முன்னேறிக்கொண்டு வருகிறது. இதற்குத் தொழிலாளர்களின் அயராத ஒத்துழைப்பும், நேர்மையான சேவையுமே காரண .''

கோண்டாவில் டிப்போவில் நடை பெற்ற தொழிலாளர் கமிட்டிக் கூட்டத்தில் கமிட்டிச் செயலாளர் திரு. பீதாம்பரம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தமது உரையில் குறிப்பிட்டதாவது: ''தொழிலாளர்களிடையே ஒற்றுமையும், தன்நம்பிக்கையும் ஏற்படவேண்டியது அத்தியாவசியம். எமது டிப்போவில் நான்கு தொழிற்சங்கங்களின் அங்கத்தவர்கள் இருந்தபோதிலும், நாம் ஒற்றுமையாக வேற்றுமையின்றி எமது தொழிலாளர் கமிட்டியை அமைத்துள்ளோம். தொழிலாளர் கமிட்டியில் உள்ளவர்களைவிட இன்னும் பல சேவைக ஆற்றுவதற்குப் பலரைக் கமிட்டியில் சேர்க்க வேண்டும் கூட்ட அறிக்கைகளையும், தீர்மானங்களையும் டிப்போ ஊழியர்களின் பார்வைக்காக விளம்பரப் பலகையில் ஒட்டவேண்டும். டிப்போ நிர்வாகம் சீர்திருத்தமாக நடக்கவேண்டும்.''

திரு. இரத்தினம் தலைமை வகித்தார். டிப்போ நிர்வாகத்தின் மேற்பார்வைக்கும் சேவையை ஒழுங்காகச் செய்து, பொதுமக்களுக்கு நன்மையை அளிக்கவும் சிலர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## இடமாற்றத்துக்கு ஆட்சேபம்

### அமைச்சருக்கு மகஜர்

உரும்பராய், வியா

கரவெட்டியார்க்கரு விநாயகர் வித்தியாசாலை ஆசிரியர் திரு எஸ். வீரகத்தி இம்மாதம் 1-ம் திகதி இரத்தினபுரி புனித அலோசியஸ் கல்லூரிக்கு மாற்றப்பட்டது அநீதியானதென வடமராட்சித் தமிழாசிரியர் சங்கம் அகில இலங்கைத்தமிழாசிரியர் சங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்ததைத் தொடர்ந்து அ. இ. த. ஆ. சங்க காரியநிர்வாகசபை கூடி ஆராய்ந்தபோது காரியநிர்வாகசபை அங்கத்தவர் இம்மாற்றத்திற்குப் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளதுடன், குறித்த ஆசிரியருக்கு இப்பொழுது 54வயது என்றும் 5 நாள் முன்னறிவித்தலுடன் எவ்வித காரணமும் இன்றி மாற்றப்பட்டுள்ளமை மிகவும் அநீதியான செயலாகு மென்றும் இம்மாற்றத்தை ரத்துச்செய்யுமாறும் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் கல்வி மந்திரிக்கு ஒரு வேண்டுகோளையும் விடுத்துள்ளது.

பருத்தித்துறை ஆட்சிமன்ற உறுப்பினருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

— —

## சங்கீத மாணவிகளுக்கு பரிசில்கள்

எழுதுமட்டுவாள், வியா

எழுதுமட்டுவ ள் நடேசர் தமிழ் மன்றத்தால் நடாத்திய சங்கீத வகுப்பு மாணவிகள் சனிக்கிழமை கொடிகாமத்தில் நடந்த கூட்டுறவுத் தின விழா சங்கீதப்போட்டியில் வெற்றியீட்டினர். சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என் நவரத்தினத்தின் பாரியார் வெற்றிபெற்றவர்களுக்கு விசேட பரிசில்களும் சான்றிதள்களும் வழங்கினார்

— —

## குடும்பத்திற்கு ஒரு ரூபாய்

சுழிபுரம், வியா

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயிலுக்கு சென்ற ஆண்டு வருகைதந்த மதுரை ஆதீன குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகளின் அறிவுரையின்படி கோயில் நித்திய கருமங்கள் நடைபெற கிராமத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்தினரும் மாதம் ஒரு ரூபா வீதம் வழங்க முன்வந்துள்ளனர். நிதிசேகரிப்பதற்கு பொறுப்பாக ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

— —

குருவித்தியாலய பிரவேசம்

## பரீட்சை 10ம் திகதி ஆரம்பிக்கிறது

கோட்டை, வியாழன்

கடந்த மாதம் 28-ம் திகதி நடை பெறுவதாகவிருந்த குருவித்தியாலய பிரவேசப் பரீட்சை இம்மாதம் 10-ம் திகதி தொடக்கம் 13-ம் திகதிவரை நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்கு பத்தொன்பதினாயிரம் பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

இக் குருவித்தியாலய பிரவேசப் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்களை நேற்று முன்தினம் பரீட்சையெடுப்பவர்களுக்குபரீட்சைப்பகுதி அனுப்பிவைத்துள்ளது.

— —

## சிவபாதசுந்தரனார் 17-வது விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

ஸ்ரீலஸ்ரீ சிவபாதசுந்தரனாரின் 17-வது ஆண்டு நிறைவுவிழா இம்மாதம் 7-ந் திகதி நடைபெறும்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் இவ் விழா திரு. க. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

## நிலப்பறி இயக்கத்துக்கு கருணாநிதி எச்சரிக்கை

சென்னை, ஆகஸ்ட் 6

நிலப் பறி இயக்கத்தைக் கைவிடும்படி வலதுசாரிக் கம்யூனிஸ்டடுகளுக்கு தமிழக முதல்வர் திரு மு. கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னை பெரம்பூரில் நடைபெற்ற பாராட்டு விழாக் கூட்டமொன்றில் இந்த வேண்டுகோளை விடுத்த கருணாநிதி ''பொது மக்கள் நன்மையைக் கருதி, நிலப் பறி இயக்கத்தை நடத்தும் எண்ணத்தை வலதுசாரிக் கம்யூனிஸ்ட்டுகள் கைவிட வேண்டும் அவர்களுக்கு இதற்கு இன்னும் நேரமிருக்கிறது. அப்படி அவர்கள் முடியாதென மறுத்தால், அரசு கைகளைக் கட்டிக்கொண்டு சும்மா வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்காது. சட்டம் இருக்கிறது. அது தன் வேலையைச் சரிவரச் செய்தே தீரும்'' என்றும் எச்சரித்தார்

## தினசரி அதிர்ஷ்ட சீட்டு

சென்னை, ஆகஸ்ட் 6

தினசரி அதிர்ஷ்ட லாபச் சீட்டைக்குலுக்கி பரிசு வழங்கும்திட்டமொன்றை ராஜஸ்தான் அரசாங்கம் இம்மாதம் 11-ம் திகதி தொடக்கம் அமுலுக்குக் கொண்டுவர விருக்கிறது.

இத்திட்டத்தின்படிமாதத்தில் 30 தினங்களிலும் பரிசுச்சீட்டுக் குலுக்கல நடைபெறும் முதற்பரிசு 1000 ரூபா மட்டுமே. ஏனைய ஆறுதல் பரிசாகச் சிலருக்கு 50 ரூபாய் வழங்கப்படும்.

ஒருமாதம் முடிவுற்றதும் எல்லாச் சீட்டுக்களும். மீண்டும் குலுக்கப்படும் முதற்பரிசாக இதற்கு 50 ரூபாய் வழங்கப்படும். இப்பரிசை ஏற்கனவே பரிசுபெற்றவர் கூட பெறமுடியும்.

— —

## ஆர்வம் குறைகிறது

புதுடில்லி, ஆக 6

குடும்பக் கட்டுப்பாட்டுக்கு 'லூப்' சாதனம் சிறந்த வரப்பிரசாதம் என்று சில ஆண்டுகளுக்கு முன் கருதப்பட்டு வந்தது. தற்போது அதன் மீது மக்கள் கொண்டுள்ள மோகம் மறைந்து கொண்டு வருகிறது.

இதனை இந்திய மத்திய அரசாங்கம் லோக சபையில் ஒப்புக் கொண்டுள்ளது.

லூப் சாதனத்தால் பாதகமான விளைவுகள் ஏற்படுவதாகப் பெண்கள் கூறுகின்றனர். லூப் சாதனத்தைப் பொருத்திக் கொண்ட பெண்களில் 70 சதவீதமானோர் அதனை நீக்கி விட்டனராம்.

## மாரடைப்புக்கு அணுசக்தி

லண்டன், ஆகஸ்ட் 6

மாரடைப்பு நிகழாவண்ணம் இருதயத் துடிப்பைக்கட்டுப்படுத்தும் அதிசய அணுசக்தி சாதனம் ஒன்றை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள் சென்றவாரம் தேசிய வைத்தியசாலையில் நோயாளி ஒருவருக்கு ரணசிகிச்சை மூலம் இந்தச் சிறிய அணுசக்தி சாதனம் பொருத்தப்பட்டது. இந்த நோயாளி இப்பொழுது பூரண சுகத்துடன் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறியுள்ளார்.

பிரிட்டிஷ் அணுசக்தி ஸ்தாபனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகளே இந்த ஆற்றல்படைத்தகருவியைப் படைத்துள்ளார்கள். மாரடைப்பு நோயால் பீடிக்கப்படுபவர்களின் இருதயத் துடிப்பைச் சீராக்கி விடும் புதுமையான சாதனம் இது 10 ஆண்டுகள் வரை இது செயற்படும் ஆற்றல் படைத்தது. இக்காலகட்டத்தின் பின்னர் புதிய கருவி ஒன்றை மாட்டி விடலாம். இந்த சாதனத்திற்கு மிகச் சிறு அளவிலான ''புளுட்டோனியம் 238'' எனப்படும்அணு நுண்மப்பொருள் இயக்கசக்தியை அளிக்கிறது.

— —

## கருணாநிதி மகாநாடு கூட்டுகிறார்

சென்னை, ஆக. 6

மாநில அரசுகள் மத்திய அரசிடமிருந்து இன்னும் அதிக அதிகாரங்கள் பெறுவது பற்றிய பிரச்னையை ஆலோசிப்பதற்காக அடுத்த மாதம் சென்னையில் மாநாடொன்றை கூட்டப் போவதாக தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அறிவித்துள்ளார்.

— —

## கைது

புதுடில்லி, ஆக. 6

பசுவதை தடையைக் கோரி இந்திய ஆட்சிமன்றத்தின் முன்பு கோஷமிட்ட சுமார் பதினொருபேரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

இலங்கை மாணவர்களும் கலந்து கொள்கிறார்கள். இலங்கை உட்பட 21 நாடுகளைச் சேர்ந்த மொத்தம் 150 மாணவர்கள் இந்தப் பயிற்சி வகுப்புகளில் பங்கு கொள்வார்கள்.

ஆங்கில மொழிச்சங்கம் பீ. பீ. ஸி. ஆங்கில சேவை சர்வதேச இல்லம் ஆகியன கூட்டாகச் சேர்ந்து இந்தப் பயிற்சி வகுப்புகளை ஒழுங்கு செய்துள்ளன 20 இளம பிரிட்டிஷ் ஆசிரியர்கள் இப் பயிற்சி வகுப்புகளில் போதனை அளிப்பார்கள். மூன்று வாரங்கள் வரை நடைபெறவிருக்கும் இவ்வகுப்புகளை பீ. பீ. ஸி. ஆங்கில சேவை அதிபரான திரு. கிறிஸ்ரோபர்நீர் வகிப்பார்.

— —

## கான்பெரா செல்லும் இலங்கைக்குழு

கோட்டை, வியாழன்

கான்பெராவில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் ஆட்சிமன்றப் பிரதிநிதிகள் கூட்டத்திற்கு இலங்கையிலிருந்து செல்லவிருக்கும் தூதுகோஷ்டிக்கு சபாநாயகர் திரு. ஸ்ரான்லி திலகரத்தின தலைமைவகிப்பார்.

அக்மீமன ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. செனபால சமரசேகரா, கொழும்பு மத்திய ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. ஆர் பிரேமதாசா ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இக்குழுவில் இடம் பெறுவார் என எதிர்பார்க்கப்பட்ட பொழுதிலும் அரசியல் நிர்ணய சபையில் இருக்கவேண்டியதனால் அவருக்குப் பதிலாக திரு. பிரேமதாசா சேர்க்கப்பட்டார். இம்மாநாட்டில் கலந்து கொள்ள நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவும் கான்பெராவுக்குச்செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

— —

## பாராட்டு

சுழிபுரம், வியாழன்

வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வியதிகாரியாகக் கடமையாற்றிய திரு. பொ. ச. குமாரசாமியின் சேவை நலம் பாராட்டு விழா வட்டுக்கோட்டை வட்டார ஆசிரியர்களால் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பிரதான மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. விழாவுக்கு திரு. சா. குணநாயகம் தலைமைவகித்தார். வட்டுக்கோட்டைத் தொகுதி முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் உட்படப் பலர் பாராட்டுரை வழங்கினர்.

## ஒதுங்கின

ராமேஸ்வரம், ஆக. 6

தூத்துக்குடியிலிருந்து கொழும்புக்கு வெங்காயம் ஏற்றிக்கொண்டு வரும் போதுவிபத்துக்குள்ளானசரக்குக்கப்பலில் வந்த 16பேரில் இதுவரை 6 பேரின் சடலங்கள் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்ட முத்துப்பேட்டை கடற்கரையில் ஐந்து சடலங்கள் ஒதுங்கியுள்ளதாகவும் இச்சடலங்கள் அடையாளம் காணமுடியாதவாறு சிதைந்துள்ளதாகவும் தெரிகிறது. சடலங்களை அடையாளம் காண்பதற்காக காணாமல் போனவர்களின் உறவினர்கள் முத்துப்பேட்டை சென்றுள்ளனர்.

கொண்டாடப்படவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை யாழ் பண்டார நாயகா ஞாபகார்த்தக்குழு செய்துவருகிறது.

இவ் வைபவத்தில் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் உட்படப் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

யாழ், பண்டாரநாயக்கா ஞாபகார்த்தக் குழு உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். தலைவர் திரு. எம். துரைராஜா, உபதலைவர்கள் திரு. வி. கிருஷ்ணபிள்ளை, ஜனாப் எம். ஏ. சி எஸ் ஏ காதர், செயலாளர் திரு. கே, பி. நாதன், தனாதிகாரி: ஜனாப் எம்.எல்எம். கலீல்.

## 10-ம் வட்டார உறுப்பினர்

நெடுந்தீவு, வியா

நெடுந்தீவு கிராம சபையின் 10-ம் வட்டார அங்கத்தவராய்இருந்த திரு. வி. சுப்பிரமணியம் ஆசிரியராக நியமனம் பெற்றதைத் தொடர்ந்து நடைபெற்ற இடைத்தேர்தலில் மூவர் போட்டியிட்டனர்.

திரு. வி. கதிரவேலு 118 வாக்குகளும், திரு. நா. இலட்சுமணராசா 109 வாக்குகளும், திரு. மார்க்குமரி சலீன் 6 வாக்குகளும் பெற்றனர். திரு. கதிரவேலு 10-ம் வட்டார உறுப்பினராகத் தெரியப்பட்டார்.


வெடிப்பு நோய், எரிவந்தம், கபிலப்புள்ளி நோய், மடல் நோய் மற்றும் நெற் தொற்று நோய்களை நீக்கச் சிறந்த வழி

BAYER ®

செரசான்




நெல் விதைகளை மட்டுமன்றி மிளகாய் விதைகளையும் பாதிக்கும் மிளகாய்க் குருமன் போன்ற நோய்கள் விளைச்சலைப் பாதிக்கும். இந்த விதைத் தொற்று வியாதிகளை விரைந்தகற்றச் சிறந்த புதிய சேதன இரசம் கொண்டது செரசான் காளான் நாசினி.

செரசான் எவ்வித விதைகளுக்கும் ஏற்றது. செரசான் கொண்டு பரிகரித்த விதைகள் ஒரு நோயுமற்று ஓங்கி வளர்ந்து பெரு விளைச்சலைத் தரும்.

சிக்கனமாக, சிறப்பாகப் பயிர்களைக் காப்பது - செரசான், அது, களவு செய்ய முடியாத பக்கெட்டில் கிடைக்கும்.

உற்பத்தியாளர்:
பேயர்
லீவர்கூசன்
மேற்கு ஜெர்மனி

இலங்கையில் விநியோகஸ்தர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டின்ஸ் வீதி, கொழும்பு 10.

P-9159


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

அஞ்சா நெஞ்சமும் சத்திய உபாசனையும் உள்ள வாழ்க்கையை அமைத்துக்கொண்டால் எவ்வித தோல்வியும் எம்மை வந்து அணுகாது.

— மகாத்மாகாந்தி.


ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna:
Post Box: 49, Jaffna. Telephone: 889,

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆடி மாதம்
22-ந் திகதி (7 - 8 - 70)


## தமிழரின் எதிர்காலம்

பல்கலைக்கழகங்களிலே மாணவர்களைஇனி இனவீதாசார அடிப்படையிலே சேர்க்க வேண்டுமென்று காலி பிரதிநிதி தகநாயகா பார்லிமென்ட் சபையில் கேட்டதற்கு, உதவி கல்வி அமைச்சர் துடாவை அந்த யோசனையை உடன் மறுத்து விட்டார் கேவலம் இன அடிப்படை மீது மக்களைத் தெரிவுசெய்வதற்கு அரசாங்கம் தயாரில்லை என்று கூறினார். இதே கொள்கையை அரசாங்கம் உண்மையில் கண்டிப்பாகக் கைக்கொண்டுவரின் இந் நாட்டுக்கே அதனால் நன்மையாவதுடன் தமிழர் உள்ளிட்டு சிறுபான்மை சமூகத்தவரின் நன்றிக்கும் நம்பிக்கைக்கும் அது பாத்திரமாகும்

இலங்கைப்பல்கலைக்கழகத்தில் பொறியியல் (இன்சினியரிங்) பகுதி பிரவேசப் பரீட்சையிலே தமிழ் மாணவர்கள் அதிகமாகத் தேறிவிட்டார்களாம். இது விபரீதமான நிலையென்றும், இதைப்பற்றி ஆட்சேபித்து இரு பெற்றோர்களும், ஒரு மாணவர் சங்கமும் தமக்கு ஆட்சேபக் கடிதம் எழுதியுள்ளதாகவும், தமிழ் சிங்கள மாணவர்களை அவர்களது ஜனத்தொகை வீதாசாரப்படியே பல்கலைக்கழகத்தில் இனி சேர்க்கவேண்டுமென்றும் அதனால் யாருக்கும் பாதகமோ அநீதியோ ஏற்படுமென்று தாம் கருதவில்லையென்றும் திரு. தகநாயக வாதித்துள்ளார். மீண்டும் அவர் வகுப்புவாத பல்லவி பாடுவதைப் பற்றி நாம் வியப்படையவில்லை சில இனவெறிச் சக்திகள் நாட்டில் உள்ளனவென்பதையும், அவர்கள் தங்கள் பழைய தோழரான திரு. தகநாயகாவைப் பயன்படுத்துகிறார்கள் என்பதையும் இதனால் அறியக்கூடியதாக இருக்கிறது. இவ்விஷயமாக அரசாங்கம் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இன்றேல் நாட்டிலே மீண்டும் இனவெறி சக்திகள் தலைதூக்கி, அமைதி குலையவும் முன்னேற்றம் தடைப்படவும் கூடும்.

இதே சமயத்தில் தமிழரிடையிலே சாதி முதலிய காரணங்களால் பிணக்குகள் தலைதூக்கி வருகின்றன இது பெரிதும் துரதிருஷ்ட வசமாகும். தமிழர் தங்கள் எதிர்காலம் என்ன ஆகுமோ என்று கவலைப்படும் இச்சமயத்தில் அவர்களிடை ஒற்றுமை நிலவவேண்டியது எவ்வளவு அவசியமென்பதை விளக்கத் தேவையில்லை. இதற்கு மாறாக அவர்களுக்குள் சச்சரவுகள் அதிகரிப்பதால், பிறர் தலையிட்டு, நிலைமைமோசமாகவும், நாட்டு மக்கள் மட்டுமல்ல உலக மக்களின் மதிப்பையும் அனுதாபத்தையும் இழக்கக் கூடியதாகின்றது முதலில் நமது வேற்றுமைகளை அன்பின் அடிப்படையில் நாம் நமக்குள் தீர்த்துக் கொண்டால்தான், பிறரிடம் நமக்கு நீதி கிடைக்க உதவியாக இருக்கும் நாட்டின் எதிர்கால தலைஎழுத்து நிர்ணயிக்கப்படும். இம் முக்கிய சமயத்தில், சிறப்பாக தமிழ் சமூகத்தவரிடையே எழுந்துள்ள சமூகப் பிணக்குகளை வளரவிடாமல், சுமுகமாகத் தீர்க்க, சமூகத் தலைவர்கள் எல்லா முயற்சிகளையும் உடனடியாக எடுக்க வேண்டியது எவ்வளவு அவசரமும் அவசியமுமாகும் என்பதை விளக்கத் தேவையில்லை. தமிழ் சமூகத்தவரின் எதிர்காலம், அவர்கள் இச்சமயத்திலே எவ்விதம் நடந்துகொள்ளுகிறார்கள் என்பதையே பெரிதும் பொறுத்ததாக இருக்கும்.

ஆசிரியருக்குக்கடிதம்

கட்டைவேலிக் கி. ச.

## 13 வட்டாரங்களில் 43 பேர் போட்டி; ஒருவர் ஏகமனதாகத் தெரிவு

உடுப்பிட்டி, புலோலி வியா.

விசேட ஆணையாளரின் நிர்வாகத்தின்கீழ்கடந்தநான்கு வருடங்களாக இயங்கிவந்த கட்டைவேலிக் கிராமசபை தேர்தல் நியமனப்பத்திரங்கள் புதன்கிழமை யாழ். மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. கே. கந்தசாமியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

அல்வாயிலுள்ள கட்டைவேலிக்கிராமசபை மண்டபத்தில் 14 வட்டாரங்களிலும் போட்டியிடும் 43பேர் தமது நியமனப் பத்திரங்களைத் தாக்கல்செய்தனர். 14-ம் வட்டாரத்தில் தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளரான திரு. வேலுப்பிள்ளை கந்தையா போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் 71 பேர் கட்டுப்பணம்செலுத்தியிருந்தனர். இவர்களில் 27பேர் தேர்தலிலிருந்துவிலகிக்கொண்டனர். இடதுசாரி கட்சிகளைச்சேர்ந்த இருவர் 10-ம்வட்டாரத்தில்நேரடிப் போட்டியில் இறங்கியுள்ளனர். வடபிரதேச சமசமாஜ பஸ் தொழிற் சங்கப் பிரதிநிதி திரு வே. பாலசிங்கம்சுயேச்சையாகப்போட்டியிடுகிறார். கம்யூனிஸ்ட்கட்சி உடுப்பிட்டிக்கிளை செயலாளர் திரு தட்சணாமூர்த்தி ஐயர் கம்யூனிஸ்ட்அபேட்சகராகத் திரு. பாலசிங்கத்தை எதிர்த்துப் போட்டியிடுகிறார்.

கலைக்கப்பட்ட கிராமசபையின் பழைய அங்கத்தவர்கள் நால்வர் போட்டியிடுகின்றனர். போட்டியிடும் அபேட்சகர்களின் விபரம் வருமாறு :-

1ம் வட்டாரம்: சின்னார் முருகேசன், வேலு சின்னத்தம்பி, முத்தையா முத்துக்கிருஷ்ணன். சுப்பையா வைத்திலிங்கம், முருகுப்பிள்ளை மயில்வாகனம்.

2ம் வட்டாரம்: முருகுப்பிள்ளை இரத்தினசபாபதி, என். திருஞானசம்பந்தபிள்ளை.

3ம் வட்டாரம்- கதிர்காமத்தம்பி நாகலிங்கம், முத்தன் ஆறுமுகம், வேலு சின்னத்தம்பி, பீ. சிவபாக்கியம், எஸ். கணேசமூர்த்தி, கே. திருநாவுக்கரசு, எம். மயில்வாகனம்.

4ம் வட்டாரம்: எஸ், மாணிக்கம், ஏ. கணேசு, கே. கணபதிப்பிள்ளை, பிலிப்பையா பிரான்சிஸ் சேவியர்.

5ம் வட்டாரம்: நாகன் சின்னத்தம்பி, கே. சந்திரசேகரம், நடராஜா விசுவலிங்கம், கே கிருஷ்ணபிள்ளை.

6ம் வட்டாரம்: ஏ கனகரத்தினம், எஸ் தியாகராசா.

7ம் வட்டாரம்; கதிர்காமு மாணிக்கம், செல்லையா வேலும் மயிலும், எஸ். செல்லப்பா, முருகேசு வல்லிபுரம்.

8ம் வட்டாரம்: கே. மார்க்கண்டு, நல்லதம்பி பொன்னுத்துரை, திருநாவுக்கரசு கணேசலிங்கம்.

9ம் வட்டாரம்: வீ. கே. வல்லிபுரம், தம்பிமுத்து கெங்காதரம், கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு.

10ம் வட்டாரம்: வேலுப்பிள்ளை பாலசிங்கம், அப்பாசாமிஐயா தட்சணாமூர்த்தி ஐயர்.

11ம் வட்டாரம்: கணபதி கணேசன், சின்னையா பொன்னையா, சின்னத்தம்பி காசிநாதர்.

12ம் வட்டாரம்: எஸ் மகேஸ்வரன், வீரன்வீரமணி

13ம் வட்டாரம்: சிற்றம்பலம் சின்னத்தம்பி, அம்பலவாணர் காங்கேசு.

14ம் வட்டாரம்: வே. கந்தையா (போட்டியில்லை).


கம்யூனிஸ்ட்கட்சி சீட்டுடன் 8 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

## குழந்தைக்கு ஜீவனாம்சம் கட்ட உத்தரவு



முல்லைத்தீவு. புதன்

முல்லைத்தீவுசெம்மலைவாசியான கனகரத்தினம் சிவசிதம்பரம் என்னும் பெண் தனக்குப்பிறந்த குழந்தையான சிவராசாவின் தகப்பன் அதேஊரைச் சேர்ந்த சின்னப்பு சிவபாதம் என்றும் அவரிடமிருந்து பிள்ளைக்கு பராமரிப்புப்பணம் பெற்றுத்தரும்படியும் முல்லைத்தீவு நீதிமன்றத்தில்தாக்



## கொடியேற்றம்

பண்ணார மொழிபாடும் அடியார்கோடி
படியேறி வருகின்ற கழலேதேடி
என்னாரம் அவனுக்கு என்றுமங்கே
இதயமெலாம் அன்பலர்ந்த இன்பக்கோலம்
நன்னடைாம் நல்லூரை நடந்துபோனால்
யாரருகே வந்தாலும் மறந்துபோகும்
இன்னன்ன வேலனது கொடியேற்றந்தான்
இன்றம்மா! எழுந்திடுவாய்! கவலைதீராய்.

நேரமது தவறாத கோயிலம்மா
நிலைபெற்ற உயிர்களது முற்றமம்மா
பாரமெலாம் தாங்குகிற பாங்கனம்மா
பாதியிலே எடுத்ததையும் கொடுப்பானம்மா
நீரகமாய் கண்ணிருந்தால் போதுமம்மா
நித்திலமே கோர்த்திடுவான் கருணையம்மா
ஏரகங்கள் ஆளுகிற கொடியேற்றந்தான்
இன்றம்மா! எழுந்திடுவாய் கவலைதீராய்!

அழகோடு தமிழரிடம் உறவுகோடி
அதனாலே முருகனிடம் அன்புகோடி
தளமன்னன் அருளுக்கும் சக்திக்குந்தான்
சார்ந்திருந்தால் இதயங்கள் தூய்மையாகும்
வளமோடும் நல்லைநகர் வண்ணக்கோயில்
வலிவேலன் பலரேத்தும் எண்ணக்கோயில்
இளமுருகன் கொடியேற்றம் இன்றுஅம்மா
ஏனம்மா எழுந்திடுவாய் கவலைதீராய்!

—நிலவின்தாசன்

★

## நல்லைப்பிரானே!

### நேரிசை வெண்பா

குலவுமிரு வாலைக் குயத்தியரோ டென்றும்
உலவுவரும் ஏகாந்தா! ஓங்கி — நிலவுமுயர்
பஞ்சம் மிடிபிணிகள் பாரிற் றலைக்காட்டா(து)
அஞ்சி அகல அருள்.

### ஆசிரிய விருத்தம்

மின்னனைய வுருவு[illegible] மெல்லிடைநல் வள்ளியை
மேவியணை [illegible]ற முருகா!
விஞ்சுபுகழ் கொண்டதெய் வானையெனு மம்மையை
முதலே வரித்த முதலே!
தன்னையெக் கணமுமெம் முள்ளத் தயர்க்கிலேம்
உலகைவலம் வந்த உரனே!
உள்ளொன்று வைத்தியாம் புறம்பொன் றுரைக்காத
உசிதகுண பு[illegible]னே யீவாய்

## ஜயாறன் எழுதுவது..

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் இன்று கொடி ஏற்றம். திருவிழா இம்முறை வெகு சிறப்பாக நடப்பதற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பெறுவதாக அறிந்தேன்.

வருடத்துக்கு வருடம், புதுப்புது நல்ல திருத்தங்கள் இக்கோயிலில் நடைபெறுகின்றன, சென்ற வருடத்திலே ஒரு பக்க மண்டபம் விஸ்தரிக்கப்பட்டு, புதிய வாசல்களும் திறக்கப்பட்டன. தெருவில் இருந்துங்கூட மக்கள் வசந்த மண்டபப் பூசையைப் பார்க்கக் கூடிய வசதிகளைச் செய்திருந்தனர். இம்முறை மற்றப் பகுதியையும் விஸ்தரித்துள்ளனர். இதனால் ஏராளமான மக்கள் கோவிலில் இருந்து வசதியாக வழிபட வாய்ப்புச் செய்திருக்கிறார்கள்.

நேற்று முன்தினம் மாலை அக்கோயிலுக்குச் சென்றிருந்தேன். திருப்பணி வேலைகள் துரிதமாக நடந்துவந்தன. வாகனங்கள் விளக்குகள் எல்லாம் புதுப் பொலிவு பெற்றன. மாலைப் பூசையில் ஒருபுதியஏற்பாடு இப்போது செய்திருக்கிறார்கள் அதற்கு "அலங்கார நைவேத்தியம்" என்று பெயர். அதாவது ஓர் அழகான சிறிய ரதத்தில்இரு மணிகள் உள்ளன 'ஓம் ஓம்' என்ற வெண்கல நாதத்துடன் அந்த ரதம் முன்செல்ல, கோவில் குருக்கள்மார்களெல்லாம் புடைசூழ்ந்து, ஒரு வெள்ளித் தட்டிலே, பல மூர்த்திகளுக்கும் உரிய நிவேதனங்களைத் தனித்தனி வெள்ளிக் கிண்ணங்களில் வைத்து எடுத்துச் சென்று, ஒவ்வொரு மூர்த்திக்கும் ஒரு கிண்ணமாக வைகின்றனர். திரைகள் போடப்பட்டே உள்ளன.

சற்று நேரத்திற்குப் பின் வழக்கம்போல் குருக்கள் வந்து திரைகளை நீக்கிப் பூசை செய்து, அந்த நிவேதனங்களும் எடுத்துச் செல்லப்படுகின்றன இந்தமாதிரி முறை மதுரை, திருச்சி மலைக்கோட்டை தயுமானவர் கோயில் இவ்விடங்களில்நடைபெறுகின்றனவாம். அந்த இரு கோயில்களிலுங்கூட, வெண்கலப் பாத்திரங்களில்தான் நிவேதனம் வைக்கின்றார்களாம். ஆனால் நல்லூர்க் கந்தசுவாமிகோயிலில் வெள்ளிப் பாத்திரங்களில் நிவேதனம் செய்வதைக் காண மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் உள்ளன.

அநேகமாக எல்லாக் கோயில்களிலும் ஒரு தட்டிலே, ஒரு பாத்திரத்தில் நிவேதனம் வைத்து துணியால் மூடியிருப்பர் ஒரே நிவேதனத்தையே பல மூர்த்திகளுக்கும் காட்டி, நிவேதனம் செய்வதே வழக்கம் சில கோவில்களில் அந்த நிவேதனத்தைத் திறப்பதற்குக்கூட நேரம் இல்லை. எல்லாம் அவசரம்: சுவாமிக்குப் பயபக்தியுடன் புதிய முறையில் செய்தும், வழக்கம்போல் பூசை அரைமணி நேரத்தில்சரியாக 6-30க்கு 'டக்'கென்று முடிந்தது.

குறித்த நேரத்தில் நிமிடம் தப்பாமல், பூசை, திருவிழா முதலியன நடப்பது ஒருபுறம் இருக்க, புதுப்புதுச் சீர்திருத்தங்களைச் செய்து இலங்கையில் மட்டுமன்றி இந்தியாக் கோயில்களுக்கும்கூட வழிகாட்டும் முறையில் இங்கு கோயில் நிர்வாகம் நடப்பது போற்றத்தக்கதாகும்.

0 0 0

எந்தாயு மெனக் கருள்
தந்தையும் நீ,
சிந்தா குலம் ஆனவை
தீர்த் தெனையாள்,
கந்தா கதிர் வேலவனே
உமையாள்,
மைந்தா குமரா மறை
நாயகனே;

— அருணகிரிநாதர்

## 'சாதிவேற்றுமைக்கு குழி தோண்ட வேண்டும்'

### வேலணை ஆலயப்பிரவேசவைபவத்தில் பண்டிதர்

வேலணை, வியாழன்

"1950ம் ஆண்டு இக்கோவிலில் ஆலயப்பிரவேசம் நடைபெறவேண்டும் எனச் சிலரிடம் கூறி, அதற்காக முயன்றேன். 20 ஆண்டுகளின் பின்னராவது இங்கு ஆலயப்பிரவேசம் நடைபெறும் நிகழ்ச்சியைப்பார்த்து மகிழ்ச்சியடைகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளனவென்பதையும், அவர்கள் தங்கள் பழைய தோழரான திரு. தக நாயகாவைப் பயன்படுத்துகிறார்கள் என்பதையும் இச்சமயத்தில் எவ்விதம் நடந்துகொள்ளுகிறார்கள் என்பதையே பெரிதும் பொறுத்ததாக இருக்கும்.

ஆசிரியருக்குக்கடிதம்

# நேசக்கரம் நீட்டுவார்களா?

இலங்கையில்சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளையும் பேசும் இரு சமூகங்கள் பழம் பெருமை வாய்ந்தனவாகத் திகழ்கின்றன சிங்களம்பேசும் மக்கள் பெரும்பான்மையினராகவும் தமிழ் பேசும் மக்கள் சிறுபான்மையினராகவும் வாழும் இந்நாட்டில் சிறுபான்மையினத்தவரான தமிழர் தமக்குள் பெரும்பான்மை, சிறுபான்மைஎனப் பிரித்து உயர்ந்தோர், தாழ்ந்தோர் எனப்பாகுபாடு காட்டித் தத்தம் சமூகத்தின் நலன், பாதுகாப்பு ஆகியவற்றில் கவனஞ் செலுத்தித் தம்மை பலப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். தமிழர் வதியும் பகுதிகளில் சிறுபான்மைத்தமிழர் தமக்கென ஒரு மகாசபை அமைத்து அதன்மூலம் அச்சமூக மக்களின் கல்வி, பொருளாதாரம், சுகாதாரம், வேலைவசதி ஆகிய சமூக முன்னேற்ற விடயங்களில் அவ்வப்போது அரசாங்க ஆதரவுடனும் பரந்தநோக்குடைய பெரும்பான்மைத் தமிழர் உதவியுடனும் முன்னேறுகின்றனர்.

இரு சமூகங்களுக்குமிடையில் தமிழ்பேசுமிடங்களில் ஒடுங்கிவாழும் சலவைத்தொழில் புரியும் ஒரு சமூகம் உண்டு. கல்விவசதி, பொருளாதாரவசதி, வேலைவசதியற்று இச்சமூகம் திண்டாடிக் கொண்டிருக்கிறது. ஒரேயொரு தொழிலை மாத்திரம் மேற்கொண்டிருப்பதால் பொருளாதார வளர்ச்சியற்ற சமூகமாக இது உள்ளது. பல கஷ்டங்களையும் எதிர்நோக்கி வறுமையல் வாடி வயிற்றை வாயைக் சட்டிச் செலவழித்துக் கல்வி கற்று இலைமறை காய்போல் விளங்கும் ஒருசில வாலிபர் யுவதிகட்குத்தானும் அரசாங்கத்திலோ, தனிப்பட்ட ஸ்தாபனங்களிலோ வேலை தேடிக்கொள்ள முடியாத நிலையுள்ளது. ஆட்சி மன்றத்திலோ, மூதவையிலோ இச்சமூகத்துக்கெனத் தெரியப்பட்ட பிரதிநிதிஒருவரும் இல்லை. ஜனநாயக நாட்டில் ஒரு சமூகம் இவ்வாறு இடர்ப்படுவது ஜனநாயக முறைக்கு ஏற்காது.

பதவிக்குவரும் அரசாங்கமே இவர்களை ஆதரிக்க வேண்டும். இவர்கள் தமிழர் வாழும் பகுதியில் எக்கட்சியையும் சாராது அரசாங்கத்தையே நம்பிவாழ்கின்றனர். எனவே அரசாங்கம் இவர்களுக்குக் கைகொடுத்து உதவவேண்டும். இதற்கு முன்னோடியாகத் தமிழ்த் தலைவர்களான பெரும்பான்மையினரும் சிறுபான்மையினரும் ஆட்சிமன்ற உறுப்பினர்களும், மூதவை உறுப்பினர்களும் பின்தங்கிய நிலையிலிருக்கும் இச் சமூகத்தவர்களுக்கு நேசக்கரம் நீட்டுவார்களா?.

சி. சுப்பிரமணியம்
செயலாளர்
சரஸ்வதி ச.ச. நிலைய
வாசிகசாலை

ஏழாலைமேற்கு,
சுன்னாகம்.

—

## கொழும்பில் மனையியல் பயிற்சி

பருத்தித்துறை, வியாழன்

இம்மாதம் 11-ம் திகதி தொடக்கம் 20-ம் திகதி வரை கொழும்பு விசாக வித்தியாலயத்தில் நடக்கவிருக்கும் மனையியல் பயிற்சிக்கு அகில இலங்கையிலுமுள்ள சகல மனையியல் ஆசிரியைகளும் அழைக்கப்பட்டுள்ளனர். இதுவரை மனையியல் பட்டதாரிப் பட்டத்திற்கென இலங்கைப் பெண்மணிகள் இந்தியப் பல்கலைக் கழகங்களுக்குச் சென்ற நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைத்து, இலங்கைப் பல்கலைக் கழகங்களிலேயே மனையியல் பகுதி ஒன்றை ஆரம்பிக்கவேண்டியதற்கான பூர்வாங்க ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது. மேற்படி மனையியல் பயிற்சி பெறும் ஆசிரியைகளுக்கு, பயிற்சி முடிவில் சான்றிதழ் பத்திரங்கள் வழங்கப்படுமெனத் தெரிகிறது.

.........

கோட்டை, வியாழன்

இலங்கைஅரசாங்கம் சர்வதேச கல்வி ஆண்டு கொண்டாட்டங்களை முன்னிட்டு விசேஷ தபால் தலையொன்றைவெளியிடத் தீர்மானித்துள்ளது.

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

யான சிவராசாவின் தகப்பன் அதேஊரைச் சேர்ந்த சின்னப்பு சிவபாதம் என்றும் அவரிடமிருந்து பிள்ளைக்கு பராமரிப்புப்பணம் பெற்றுத்தரும்படியும் முல்லைத்தீவு நீதிமன்றத்தில்தாக்கல்செய்த மனுமீதான விசாரணை முல்லைத்தீவு நீதிபதி திரு. திஸநாயக்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது விசாரணையின்பின் நீதிபதி பிரதிவாதியான சின்னப்பு சிவபாதத்தைப் பார்த்து 'சாட்சியங்கள் மூலம் நீர்தான் பிள்ளையின் தகப்பன் என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது' எனக்கூறி மாதம் 30 ரூபா பிள்ளைக்குப் பராமரிப்புபணமாகக் கட்டுமாறு உத்தரவிட்டுதீர்ப்பளித்தார்.

மனுதார் சார்பில் திரு வின்சன்ட் பாலசிங்கமும் எதிர்மனுதார் சார்பில் திரு பி. என். றெஜிநோல்ட், திரு கே. ஐயாத்துரை ஆகியோரும் ஆஜராகினர்.

— —

## சந்தேகத்தில் இருவர் கைது

கைதடி, வியாழன்

கதிர்காமத்தில் நடைபெற்ற திருட்டொன்று சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் சங்கானையில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்

கதிர்காம யாத்திரை செய்த கைதடி மேற்கைச் சேர்ந்த வி. சுப்பிரமணியம் குடும்பத்தினர் ரொக்கம் உட்பட தமது உடைமைகளை அங்கு திருட்டுக் கொடுத்துவிட்டு வெறுங் கையுடன் ஊர் திரும்பியதாக 'ஈழநாடு' இதழில் வெளியான செய்தியைத் தொடர்ந்து வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஒருவர் மேற்படி சந்தேக நபர்கள் பற்றிக் களவுகொடுத்தவருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சங்கானையைச் சேர்ந்த பிரஸ்தாப சந்தேக நபர்களைச் சங்கானைப் பொலிசார் கைதுசெய்து விசாரணை நடத்தியபின் பிணையில் விட்டுள்ளனர்.

......

## பால் சபையின் பால் விநியோகம்

சுழிபுரம், வியா

சுழிபுரம் கிராமசபை எல்லைக்குட்பட்ட இலவச பால் விநியோக நிலையங்களில் பால்சபையினரின் போத்தலில் அடைக்கப்பட்ட பால் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையங்கள் மூலம் வலி: மேற்கு ஐக்கிய பாற்பண்ணைச் சங்கத்தினரின் பசும்பால் விநியோகிக்கப்பட்டுவந்தது.



## வித்துவான் பட்டம் பெற்றார்

யாழ்ப்பாணம், வியாழன்

கோப்பாயைச் சேர்ந்த செல்வி புஷ்பகாந்தி இராசையா தமிழகம் சென்றுத் இசை பயின்று வித்துவான் டிப்ளோமா பட்டம் பெற்றுத் திரும்பியுள்ளார்.

நான்கு வருடம் இசைபயின்று இசைப் பேராசிரியர்களின் பாராட்டைப் பெற்ற இவர் கோப்பாய் மகாவித்தியாலய இளைப்பாறிய அதிபர் திரு த. இராசையாவின் புதல்வியாவர். தமிழகம் செல்ல முன்னர் கோப்பாய் ரசிக கலாமன்றத்தில் சங்கீத பூஷணம் வேலாயுதபிள்ளை இசைப்புலவர் என். சண்முகரட்ணம் ஆகியோரிடம் இசைப்பயிற்சி பெற்றார்.

......

## 3 ஆண்டுகளாக மழை இல்லை

சானா, ஆகஸ்ட். 6

யேமன் குடியரசில் கடந்த மூன்று ஆண்டுகளாக மழையில்லை. இதனால் இந்த நாட்டு மக்கள் தண்ணீர்ப் பஞ்சத்தினாலும், வரட்சியினாலும் பெருந்துன்பம் அனுபவிக்கிறார்கள்.

......

## மதியழகன் திரும்பினார்

சென்னை, ஆகஸ்ட். 6

வெளிநாடுகளில் சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டிருந்த தமிழ்நாடு நிதிஅமைச்சர் திரு மதியழகன் இன்று காலை சென்னைவந்து சேர்ந்தார். திரு மதியழகனை முதலமைச்சர் திரு மு. கருணாநிதியும் மற்றும் பிரமுகர்களும் வரவேற்றார்கள்.

... ...

## பலாத்கார வழக்கு

யாழ்ப்பாணம், வெள்ளி

வவனியா பலாத்கார வழக்கு நேற்றுக் காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதியரசா விசாரணையை இம்மாதம் 10-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

மேவியனை ... முருகா!
விஞ்சுபுகழ் கொண்டதெய் வானையெனு மம்மையை
முதலே வரித்த முதலே!
உன்னையெக் கணமுமெம் முள்ளத் தயர்க்கிலேம்
உலகைவலம் வந்த உரனே!
உள்ளொன்று வைத்தியாம் புறம்பொன் றுரைக்காத
உசிதகுண ... யீவாய்
இன்னலால் எம்மையேன் இவ்வாறு எண்ணற்ற
இம்சைப் படுத்து கின்றாய்?
இவ்வளவு காலமும் சோதித்த சோதனைகள்
இன்னமும் போத விலையோ
வன்மைகொள் நல்லையில் வள்ளிதெய் வானையொடு
வாழ்வுகொள் கந்த வேளே!
வடிவேல் கரங்கொண்டு வண்ணமயின் மீதேறி
வந்தெமக் கருளு வாயே!

சரணம்

குறிஞ்சி வேந்தே குகனே சரணம்
நறுஞ்சீ ரலைவாய் நாதா சரணம்
செறுஞ்சீ ரரக்கர் தேவா சரணம்
பெறுஞ்சீர் நல்லைப் பிரானே சரணம்

— கவிஞர் முருகசூரியன்,
கோப்பாய்

★

## 'சீரான நல்லைதனில் திகழுற்சவம்'

-அரியாலையூர் வே. ஐயாத்துரை-

வடிவேல னுக்குமகிழ் கொடியேற்றமே!
வளமான நல்லைவளர் வருடோற்சவம்
கடிகார மோடுமெழில் நெடுகோபுரம்
கவின்சேவற் கொடியாடக் காணுற்சவம்

மஞ்சமெழில் விஞ்சுபுகள் மாண்புற்சவம்
மால்கயிலை வாகனம் வருமுற்சவம்
செஞ்சடையன் ஆதிசிவ சுப்பிரமண்யன்
திருஞான அருள்பொழியு சீருற்சவம்

கனிகண்டு தனிநின்ற கருவுற்சவம்
கன்னியிரு பேருடன் காணுற்சவம்
இனிவுண்டு நல்லைதனில் எழிலுற்சவம்
ஏறுமயில் ஏறுபவன் இதமுற்சவம்

மச்சிநிகர் சப்பரம் மலருற்சவம்
மைஞ்ஞைறுமுதல் வாகனம் மகிழுற்சவம்
பச்சைபடர் உச்சமெழில் பளிருற்சவம்
பன்னிரு கரத்தனணி பணியுற்சவம்

தகதகென ஒளிவீசும் தலஉற்சவம்
தங்கவடி வேலனெழுந் தனியுற்சவம்
அகமொளிரு மானந்த அதியுற்சவம்
ஆறுமுக ஐயனெழுந் தேருற்சவம்

படிபரவு நெடியருள தீர்த்தோற்சவம்
பக்திமிகு சக்திதரு பாங்குற்சவம்
விடிவுவர வினையகல வேண்டுற்சவம்
விசுரமுறை துதிபரவு விதியுற்சவம்

கொடிபோலு மடியவர்கள் கூடுற்சவம்
குமரேசன் புகழ்பாடும் அருளுற்சவம்
செடில்குத்திக காவடிகள் சேருற்சவம்
சீரான நல்லைதனில் திகழுற்சவம்.

## முதலிடம் பெற்றார்

யாழ்ப்பாணம், வெள்ளி

அரியாலை சனசமூக நிலைய 21-வது ஆண்டு விழாவை யொட்டி நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி மத்திய பிரிவில் செல்வன் சத்தியானந்தசிவம் தவசீலன் முதலாமிடத்தைப் பெற்றார். செல்வன் தவசீலன் பரியோவான் கல்லூரி மாணவராவர். (தே. நி)

வேலணை ஆலயப்பிரவேசவிழாவில் ...

வேலணை, வியாழன்

''1950-ம் ஆண்டு இக் கோவிலில் ஆலயப்பிரவேசம் நடைபெறவேண்டும் எனச் சிலரிடம் கூறி, அதற்காக முயன்றேன். 20 ஆண்டுகளின் பின்னராவது இங்கு ஆலயப்பிரவேசம் நடைபெறும் நிகழ்ச்சியைப்பார்த்து மகிழ்ச்சியடைகிறேன்.

நாம் காலப்போக்கை அனுசரித்துவாழ வேண்டும். நாகரிகமுள்ள பண்புள்ள மக்களாக எல்லோரையும் சமமாக மதித்து மனிதர் வாழவேண்டும் சகமனிதனை மதிக்கவேண்டியது இக்காலத்தில் மிக இன்றியமையாததாகும் ஆணவத்தையும் அகங்காரத்தையும் நீக்கி கோவில் சன்னதியில் அனைவரும் சமமென எண்ணும் மனப்பாங்குடன் கடவுள் வழிபாட்டில் தோன்றுதல் வேண்டும்''

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலனசபையினரின் ஏற்பாடையடுத்து நடைபெற்ற ஆலயப்பிரவேச நிகழ்ச்சியில் தலைமைவகித்துப்பேசிய ஊர்காவற்றுறைத் தொகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்

தமிழும் சைவமும் தமிழினமும் இந்த நாட்டில் வளம்பெற்று வாழவேண்டுமானால் நமக்குள்ளேயுள்ள சாதி வேற்றுமையையும் தீண்டாமையையும் குழிதோண்டிப் புதைக்கவேண்டும் ஒன்றேகுலம் ஒருவனே தேவன் என்ற உயர்ந்த கொள்கைக்கு மாறானவற்றையெல்லாம் கைவிட்டுவிடவேண்டும்'' என திரு. இரத்தினம் கூறினார்.

தீவுப்பகுதிக்காரியாதிகாரி திரு. எஸ். விநாயகலிங்கம் வேலணை கிச தலைவர் திரு க. சதாசிவம், திரு. சி இராசரெத்தினம் மற்றும் ஆலயபரிபாலன சபையினரும் உரையாற்றினர்.

நேற்றுமுன்தினம் நண்பகல் நடைபெற்ற இவ் ஆலயப்பிரவேசத்தின் போது ஆலயப்பிரவேசத்தில் ஈடுபட்டோர் அளவிலா மகிழ்ச்சியுடன் வணக்கத்துக்குரிய பொருட்களுடன் ஆலயத்தின் உள்சென்று வழிபட்டு அர்ச்சனை செய்துவிட்டுத் திரும்பினர்.

0 0 0

## நெற்றிக்கண் ஆட்டுக்குட்டி

வாழைச்சேனை, வியாழன்

வாழைச்சேனை மாதர் ஒழுங்கையைச் சர்ந்த க. இரவீந்திரன் என்பவருக்குச் சொந்தமான ஆடு, நெற்றிக்கண் உள்ள குட்டியொன்றையீன்றுள்ளது. இயற்கையான இரு கண்களைவிட, நெற்றியிலும் ஒரு கண்ணுடன்பிறந்த இவ்ஆட்டுக்குட்டி இரண்டு நாட்களில் இறந்துவிட்டது.

## எம். பிக்கள்

1, ம் பக்கத் தொடர்ச்சி

கடந்த பலவருடங்களாக பிரச்னைகளை தந்துகொண்டிருந்த 13-ம் விதியை முற்றாக மாற்றியமைப்பதையே நான்விரும்புகிறேன்- செனட்டர் கே, எம். பி, ராஜரத்தினவும் பேசினார்,

— —

## கோப்பாய் இணக்கசபை

கோப்பாய், வியா

இம்மாதம் 1ம் திகதி விசாரணைகளுக்காகக் கூட்டப்பட்ட கோப்பாய் இணக்க சபை விசாரணைகளை நடத்தாமலே கூட்டத்தை ஒத்திவைத்தது. இக் கூட்டத்திற்கு அழைப்பின்றிப் பிரசன்னமான ஒருவரின் விதண்டாவாதம் காரணமாகக் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்த முடியாதிருப்பதாகக் கூறிச்சபைத்தலைவர் கூட்டத்தை இம் மாதம் 16ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

— —

## புதிய நைஜீரிய தூதர்

கோட்டை, வியா.

நைஜீரியக் குடியரசு இலங்கையில் தமது தூதராக திரு ஜே என். யுகேக்புவை நியமித்துள்ளது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நைஜீரியத் தூதராக நியமிக்கப்பட்ட இவர் புதுடில்லியிலேயே தங்கியிருப்பார்.

## தையல் பயிற்சி நிலையம்

தாவடி, வியா

தாவடி ஸ்ரீகணேசா வாசிகசாலைக் கிராமமுன்னேற்றச் சங்கத்தில் அரசாங்க உதவியுடன் தையற்பயிற்சி நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பயிற்சி வகுப்பை, இளைப்பாறிய வைத்திய அதிகாரி திரு. கு. தம்பையா ஆரம்பித்து வைத்தார். பல மாணவிகள் பயிற்சிபெற முன்வந்துள்ளனர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org